உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 18 செவ்வாய்க்கிழமை (01-06-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 160

# ஈ.பி.டி.பி. பிரதேசசபை உறுப்பினரும் மைத்துனரும் நேற்று சூட்டுக்குப்பலி

## கந்தர்மடம் பகுதியில் பிஸ்டல் குழு கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஈ.பி.டி.பி. அமைப்பின் நல்லூர் பிரதேசப் பொறுப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் உப–தலைவருமான தியாகராஜா ராஜ்குமார் (வயது 32) என்பவரும் அவரது மைத்துனரான இளைஞர் ஒருவரும் நேற்றுக் காலை கந்தர்மடம் பழம் வீதியில் வைத்துப் 'பிஸ்டல் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் இவர்கள் இருவரும் பழம் வீதியில் உள்ள தமது வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் புறப்பட்ட பின்னர் சுமார் 50 யார் தூரத்தில் — அங்குள்ள வயிரவர் ஆலயத்துக்கு சற்று தொலைவில் வைத்து — விடுதலைப்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## பளையில் வர்த்தகரின் வீடு மீது சூடு!

தென்மராட்சி, ஜூன் 1

பளை செல்வபுரத்திலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

சுமார் 10 நிமிட நேரம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீட்டில் இருந்த பல பொருள்கள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் இடம்பெற்ற போது வர்த்தகரும் அவரது குடும்பத்தவரும் வீட்டில் உறக்கத்தில் இருந்தபோதும் எவருக்கும் அதனால் பாதிப்பு ஏற்படவில்லை. (ஐ-117)

## ஹர்த்தால் அனுஷ்டிக்க கோருகிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 1

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதைக் கண்டித்தும்—

பொதுமக்களைப்பாதிக்கும் வகையில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அரச அலுவலகங்களை மூடுமாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிவுறுத்தல்களை ஆட்சேபித்தும்—

குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு கோரி உள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் உபதலைவர் தியாகராசா ராஜ்குமார் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இது தொடர்பான அறிவித்தல் ஈ.பி.டி.பியினரால் நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்பட்டது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

### செவ்வாய், வெள்ளி இரு தினங்களும்

## கடமைக்கு சமுகமளிப்பதில்லை என செயலக ஊழியர்கள் ஒருமித்து முடிவு

### இன்று படைத்தளபதியிடம் தெரிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 1

அரச ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லாத காரணத்தினால் தொடர்ந்து செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கடமைக்குச் சமுகமளிப்பதில்லை என்று யாழ். மாவட்டச் செயலக ஊழியர்கள் நேற்றுக் கூடி ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

பலாலியில் கடந்த வெள்ளிக்கிழமை குடாநாட்டின் அரச திணைக்களத் தலைவர்களை நேரில் சந்தித்த வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா புலிகளின் அறிவுறுத்தலைச் செவிமடுக்காது மேற்படி இரு நாள்களும் அரச ஊழியர்கள் தமது கடமைக்குச் சமுகம்தர வேண்டுமென்று கோரியதுடன் இது தொடர்பாகச் சகல ஊழியர்களுடனும் கூடி தீர்மானம் எடுத்து அதனைத்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதலில் காயமடைந்தவர் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு நகரில் கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த தேசிய துணைப்படை உறுப்பினரான பரமானந்தம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் நேற்றிரவு 2 மின்மாற்றிகள் தகர்ப்பு!

வவுனியா, ஜூன் 1

வவுனியாவில் நேற்றிரவு இரண்டு மின் மாற்றிகள் இனந்தெரியாதோரால் அடுத்தடுத்துக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

வவுனியா குருமன் காட்டுச் சந்தியில் உள்ள மின்மாற்றி இரவு 9-30 மணியளவிலும்—

பூந்தோட்டம் குடியிருப்புச் சந்தியில் உள்ள மின் மாற்றி இரவு 9-45 மணியளவிலும் —

குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டதை அடுத்து மன்னார் வீதியின் ஒரு பகுதியும் பூந்தோட்டம் பிரதேசத்தின் ஒரு பகுதியும் இருளில் மூழ்கின. (ஐ-6-164)

### வந்தாறுமூலையில்

## கடத்தப்பட்ட இளைஞர் சடலமாகக் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

சித்தாண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி வீரசிங்கம் (வயது 26) என்பவரின் சடலமே அது என்று அடையாளம் காணப்பட்டது. இவர் கடந்த சனிக்கிழமை இரவு கண்ணகி அம்மன் ஆலய தீக்குளிப்பு வைபவத்துக்குச் சென்றிருந்த

[10 ஆம் பக்கம் பார்க்க]

### அழகி ரீற்றா கொலை வழக்கு

## எதிரிகள் மூவருக்கும் மரண தண்டனைத் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 1

இந்திய அழகியான ரீற்றா மனோகரன் கொலைசெய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் மூவருக்கு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

குற்றவாளிகளான கொண்டை அஜித் எனப்படும் அஜித் பெர்னாண்டோ, நிஷாந்த எனப்படும் பெசில் மெண்டிஸ், சமிந்த குமார பெர்னாண்டோ ஆகியோருக்கே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் இ. திஸாநாயக்க தலைமையிலான நீதிபதிகள் ராஜா பெர்னாண்டோ, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் அடங்கிய 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

ஜனாதிபதி குறிப்பிடும் தினத்தில் இவர்களது மரண

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சீநோர் முகாமில் இரு இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 1

வன்னியில் இருந்து யாழ். குடாக்கடல் ஊடாக குருநகரை வந்தடைந்து – சீநோர் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மேலும் இருவர் கடந்த 26 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சண்முகன் ரேணுகரன் (வயது 21 — ஆவரங்கால், புத்தூர்), அருமைத்துரை தவச்செல்வன் (வயது 22 — குஞ்சர்வளவு, கரவெட்டி மத்தி) ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் தற்போது குருநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்குள் இவர்களுடன் சேர்த்து 5 பேர் இம் முகாமில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மடு உற்சவத்தைச் சுமுகமாக நடத்த புலிகளின் ஒத்துழைப்பும் பெறப்படும்

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 1

அடுத்த மாதம் நடைபெறவுள்ள மடுமாதா ஆலய உற்சவத்தை சுமுகமாக நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் பெறப்படும்.

மன்னார் ஆயர் அதி.வண. இராயப்பு ஜோசப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது மடுத் தேவாலயத்தைச் சுற்றியுள்ள ஒரு கிலோ மீற்றர் பிரதேசத்துக்குள் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளது. எனினும் ஆலய சுற்றாடலில் இன்னும் சோதனை நிலையங்கள் காணப்படுகின்றன. சீருடை தரித்த படையினரின் ஆயுதங்களுடனான நடமாட்டமும் இன்னும் இருந்து வருகின்றது.

நேற்று முன்தினம் தேவாலயத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் உற்சவத்துக்கு வரும் பக்தர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்க
## ஒன்று கூடல்

காலம்: 04 — 06 — 1999 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 11. 30 மணி
இடம்: புதிய உயர் கல்லூரி
(ஆரியகுளம் சந்தி)

அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்

81, மானிப்பாய் வீதி,
மானிப்பாய். (சி/7733)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கலாமணி சிவானந்தன்

[உப அதிபர். றோ. க. பாடசாலை, உரும்பிராய்.]

தோற்றம்: 28 - 01 - 1958 மறைவு: 23 - 05 - 1997

திதி:
01 - 06 - 1999 செவ்வாய்க்கிழமை

ஆண்டு இரண்டு கழிந்தது. ஆனாலும் எங்கள் உள்ளத்தில் அழியாத ஓவியமாக அமர்ந்து இருக்கிறீர்கள். உங்கள் ஆத்ம சாந்தியின் பொருட்டு இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

இந்துக் கல்லூரி ஒழுங்கை, கணவன், பிள்ளைகள்,
உரும்பிராய். (66250) தாயார், சகோதரர்.

## நினைவலைகள்



### நல்லையா கிளேற்றன்
இறப்பு: 01—06—93

### கிளேற்றன் சுதந்திரநாயகி
(தேவி)
இறப்பு: 14—09—83

மண்ணக வாழ்வு மறைந்தாலும்—நிதம்
விண்ணவர் அன்பில் நிலைத்திடுக
வானகத் தூதர் புனிதருடன்—என்றும்
வாழ்ந்திடும் தகுதியில் உயர்ந்திடுக!

உலகினில் அவர்கள் இறந்தாலும்—இறை
உருவினிலே நிலைத்தே வாழ்ந்திடுக
சாவுயிர்க் கதவினை அடைந்தாலும்—நித்திய
சாந்தியில் என்றும் நிலை பெறுக!

தகவல்:
தீபன்ஸ்

இல. 211, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (66253)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முகாமைத்துவப் பயிலுநர் பதவிகள்

எமது பல்கலைக்கழகப் பொது நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகத்திலான ஒரு வருட காலச் செய்முறைப் பயிற்சியாளர்களாகக் கடமையாற்ற விரும்பும் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளிடம் இருந்து மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். கணனியியல் அறிவு பெற்றவராகவும் இருத்தல்மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

இப் பதவிக்கான தெரிவு தொழில்சார் தேர்வு ஒன்றின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் சுய விவரங்களுடன்கூடிய தமது விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர்/ தாபனக்கிளை (கல்வி சாரா), யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரியிட்டு, பணிப்பாளர், தொழில் நெறிப்படுத்துகைப் பணியகம் (Career Guidence Office) யாழ். பல்கலைக்கழகம் ஊடாக 1999 - 06-15 ஆம் திகதிக்குமுன்பாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சம்பளம் நாளாந்த விதத்தில் வழங்கப்படும்.

### தொழில்சார் எழுத்துத் தேர்வு

விண்ணப்பதாரியின் ஆங்கில அறிவையும், கணனி சம்பந்தமான அறிவையும் அவற்றோடு அவதானித்தல், பகுத்துணர்தல், ஆய்வறிதல் முதலானவற்றையும் உள்ளடக்கியதாக அமையும்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
01 - 06 - 1999
(சி/7731)

## நாகம்ஸ்
சுன்னாகம்.

அர்ஜுன் - ரஞ்சிதா
கவுண்டமணி - செந்தில்
நடித்த
**ஜெய்ஹிந்த்**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(66252)

## ராஜா
யாழ்ப்பாணம்

விஜய் - தேவயானி
ரம்பா - மணிவண்ணன்
செந்தில்
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10-30, 2-00, 5-00
[சி/7708]

## நன்றிகளும் வணக்கங்களும்

இந்தியாவில் காஞ்சியில் கல்வி கற்கச் செல்ல உள்ள எனது புதல்வர்களாகிய

(i) ப்ரம்மஸ்ரீ
**வரத. நகுலேஸ்வரசர்மா**
(ii) ப்ரம்மஸ்ரீ
**வரத. திவாகரேஸ்வரசர்மா**

இவர்களுக்குக் கல்வியைப் புகுத்தியவரும் எமது குருவுமாகிய **காமத்திரிபீட அதிபர்** அவர்களுக்கும் மற்றும் **பாலசர்வேஸ்வரக்குருக்கள்** அவர்களுக்கும் **இந்துமத குருமார் ஒன்றியத்தினருக்கும்** மற்றும் வேறு வழிகளில் உதவிய பதிவாளர் **சதாசிவ ஐயா** அவர்களுக்கும் அதன் இணைப்பாளருக்கும் கல்வியங்காடு **வீரபத்திர சுவாமி கோயில் பரிபாலன சபையினருக்கும்** நிதியுதவி வழங்கிய **அவ்வூர் மக்களுக்கும்** எமது ஏனைய **ஆலய மக்களுக்கும்** எமது குடும்பத்தினரின் நன்றி கலந்த வணக்கங்கள்.

சுபம்

— பொன். வரதராஜக் குருக்கள்

வீரபத்திர கோயில்,
கல்வியங்காடு. [66249]

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை இராசையா

யாழ்ப்பாணம் 05, பலாலி வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசையா 30 - 05 - 99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், சந்திரராஜா (கனடா), சந்திரமோகன் (கொழும்பு), சந்திரசிறி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜா, விஜயநாயகி, சுசிலா, ராஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூவிலிங்கம், சிவராசா, செல்லம்மா மற்றும் சிவபாக்கியம், சிவயோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01-06-99) கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ஆ. செல்லையா

05, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (66239)

### திருமதி நவரத்தினம் பூபதி

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் பூபதி காலமானார். அன்னார் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் றஞ்னானந்தன் (இத்தாலி), சச்சிதானந்தன் (இத்தாலி), கிருபானந்தன் (டென்மார்க்), பரமானந்தம் (இத்தாலி), பிறேமானந்தம் (இத்தாலி), சுபாதந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தி, லதா, சுதா, சுனித்தா ஆகியோரின் அன்பு மாமியும், நிருஷா, பிரதீப், சகானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (01-06-99) இன்று செவ்வாய்க்கிழமை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இழங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
நா. நவரத்தினம்
(கணவன்)
ந. சுபாதந்தன்
(மகன்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (66255)

### திருமதி ஜெயராணி சிவபாலசுப்பிரமணியம்
(பாப்பா)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி சிவபாலசுப்பிரமணியம் 31-05-99 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவபாலசுப்பிரமணியம் (சிவா ஸ்ருடியோ உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சுபாஜினி (கொழும்பு), நிரோஜன் (கனடா), சேந்தன் (கொழும்பு), மயூரிகா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. மகேஸ்வரி
(மாமி)

பிள்ளையார் வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. [சி/7734]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நாவின் சமாதான முயற்சிகளை இந்தியா நிராகரித்தது

## ஊடுருவல்காரர்கள் முதலில் வெளியேற வேண்டுமாம்

புதுடில்லி, ஜூன் 1

ஜம்மு காஷ்மீர் தொடர்பாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்குத் தீர்வு காண ஐ. நா மேற்கொண்ட முயற்சியை இந்தியா நிராகரித்து விட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தீர்க்க இரு நாடுகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்த ஐ.நா. விரும்புவதாகவும் —

அதற்காக இரு நாடுகளுக்கும் விசேட தூதர்களை அனுப்ப விரும்புவதாகவும் —

ஐ நா. செயலாளர் நாயகம் கோபி அனான் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தொலைபேசி மூலம் கோரிக்கை விடுத்தார்.

இந்திய மண்ணுக்குள் ஊடுருவியுள்ளவர்களை வெளியேற்றும் வரை எமது நடவடிக்கை தொடரும் எக்காரணம் கொண்டும் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது. ஐ நாவின் சமாதான முன் முயற்சிகள் எமக்கு தேவை இல்லை' என்று வாஜ்பாய் அவரிடம் தெரிவித்து அவரின் யோசனையை நிராகரித்து விட்டார்.

இந்த விவகாரத்தில் 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் எதையும் இந்தியா ஏற்கப்போவதில்லை என்றும் வாஜ்பாய் கூறினார்.

அதே நேரம் — நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளப்போவதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் இந்தியாவுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த யோசனை பரிசீலனையில் உள்ளதாக இந்தியா அறிவித்துவிட்டது.

இதற்கிடையில் — இந்த விவகாரத்தை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் எழுப்ப பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டது. அந்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் நிரந்தரமாக அங்கம் வகிக்கும் ஐந்து நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் இந்த விடயத்தை பாதுகாப்புச் சபையில் எழுப்பப் போவதில்லை என்று இந்தியாவிடம் உறுதி தெரிவித்துள்ளன. மற்றைய நாடான சீனா எதுவித கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

காஷ்மீர் நிலவரம் தொடர்பாக அமெரிக்க, பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வர் சிங்குடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளனர்.

நிலைமையை அவர்கள் கேட்டறிந்ததாகக் கூறப்பட்டது.

(இ-3)

## ஊடுருவல்காரர்களை வெளியேற்ற பல மாதங்கள் செல்லலாம்

லண்டன், ஜூன் 1

ஜம்மு-காஷ்மீரில் ஊடுருவியுள்ளவர்களை வெளியேற்ற இந்தியா ஆரம்பித்துள்ள நடவடிக்கை பல மாதங்கள் நீடிக்கும் சூழ்நிலை நிலவுவதாக பி.பி.ஸி.கருத்து வெளியிட்டுள்ளது.

காஷ்மீரில் இந்தியா ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கை குறித்து பி.பி ஸி ஒலிபரப்பிய கண்ணோட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பி.பி.ஸி மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானில் இருந்து ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் காட்டில் பகுதிக்குள் நுழைந்துள்ளவர்களைத் தேடி அழிக்கும் பணியை இந்தியா ஆரம்பித்துள்ளது.

இந்தப்பணி மிகவும் இலேசான விடயம் அல்ல. மலைகளுக்குள் தங்கி பாதுகாப்பான சூழ்நிலையில் மலையை காவலரணாகக் கொண்டு—அவர்கள் தங்கி உள்ளனர்.

இந்த ஊடுருவல்காரரை தாக்கி அழிக்கும் இந்தியாவின் நடவடிக்கை நேருக்கு நேரான சண்டையாக மாறி வருகின்றது

இந்தியா பெரிய அளவில் துருப்பினரை ஈடுபடுத்த வேண்டிய நிலை உள்ளது. பெரும் உயிரிழப்புக்களையும் இந்தியா சந்திக்க வேண்டி வரும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தியாவின் நடவடிக்கை பல மாதங்கள் நீடிக்கும் — இப்படி பி.பி.ஸி தெரிவித்தது.

(இ-3)

### உலக அரங்கில்

## மன்னிப்புச் சபை வலியுறுத்து

1989 ஆம் ஆண்டு சீனாவின் தியனமன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் செய்தபோது கைது செய்யப்பட்ட மாணவர்களைச் சீன அரசு விடுதலை செய்யவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரி உள்ளது.

(இ)

## பழைமை வாத கிறிஸ்தவர் கோரிக்கை

மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் புதைக்கப்பட்டுள்ள சோவியத யூனியனின் ஸ்தாபகரான லெனின் பூதவுடல் உட்பட சோவியத் யூனியனின் ஏனைய தலைவர்களது பூதவுடல்களை அங்கிருந்து அகற்றுமாறு ரஷ்யாவிலுள்ள பழைமை வாத கிறிஸ்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செஞ்சதுக்கத்தில் பல கலாசார வைபவங்கள் இடம் பெற்று வருகின்றன. எனவே இறந்தோரின் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் கலாசார வைபவங்களை நடத்துவது வரவேற்கத்தக்க விடயம் அல்ல என்று கூறியே பழைமைவாதகிறிஸ்தவர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

(இ-௩)

## பகை நடவடிக்கையை

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேரில் பார்த்தார்

புதுடில்லி, ஜூன் 1

ஜம்மு-காஷ்மீரில் இந்தியப் படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையை முப்படைத் தளபதிகள் சகிதம் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டார்.

அங்குள்ள தளபதிகளுடன் நிலைமைகளை நேரில் ஆராய்ந்த அமைச்சர் இராணுவ நடவடிக்கை வெற்றி பெற பூரண ஆதரவையும் தெரிவித்தார்.

பின்னர் டில்லி திரும்பிய அமைச்சர் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து அங்குள்ள நிலைமையை விளக்கிக் கூறினார்.

இராணுவ நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காக விசேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

முப்படைத் தளபதிகள் கொண்ட அந்தக் குழு ஒவ்வொரு மணிநேரமும் கூடி யுத்த நிலைமை குறித்து பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு விளக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இலக்கான எம். 17 ரகக் ஹெலியின் விமானி பாரசூட் மூலம் பாதுகாப்பாக இறங்கிய போதும் அவரைச்சுட்டுக் கொன்றதாக பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம் சாட்டியுள்ளது

பாகிஸ்தானால் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்ட அந்த விமானியின் சடலத்தில் சூட்டுக்காயங்கள் இருந்ததாக இந்தியா தெரிவித்துள்ளது.

[இ-3]

# மீன்பிடிப் படகுகள் மூலம் இத்தாலி செல்லும் கொசோவோ அகதிகள்

ரோம், ஜூன் 1

கொசோவோவில் இருந்து வெளியேறும் அல்பேனிய அகதிகள் இத்தாலிக்குள் நுழைவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மெசடோனியாவில் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களில் நிலவும் நெருக்கடி காரணமாக இத்தாலிக்குள் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆயிரக்கணக்கான அகதிகள் மீன்பிடிப் படகுகள் மூலம் இத்தாலிக்குள் நுழைவதால் இத்தாலிக்கு பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

மீன்பிடிப்படகு ஒன்றின் மூலம் நேற்று முன்தினம் இத்தாலி நோக்கி வந்த 500 பயணிகள் கடலில் ஏற்றப்பட்ட திடீர் காற்றினால் தத்தளித்ததாகவும்—

பின்னர் அவர்களை இத்தாலிக் கரையோரப் படையினர் காப்பாற்றிக் கரை சேர்த்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## இஸ்ரேல் பிரதமரிடம் கோரிக்கை

காஸா ஜூன் 1

இடைநிறுத்தப்பட்ட பலஸ்தீனப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிக்கும்படியும் யூதக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துமாறும் இஸ்ரேல் அதிபர் எகுட்பராக்கிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தும் ஜோர்தான் மன்னர் அப்துல்லாவும் கூட்டாக மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

சமீபத்தில் இடம் பெற்ற தேர்தலில் எகுட்பராக் வெற்றியீட்டியது தெரிந்ததே.

(இ)

## தமிழகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

தமிழ் நாட்டில் சென்னை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் பொலீஸ் நிலையங்களுக்கு அருகில் குண்டுகள் மீட்கப்பட்டதை அடுத்து பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையங்களுக்குள் பயணிகள் தவிர்ந்த எவரும் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது

விமான நிலையச் சுற்றாடலில் மோப்ப நாய்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ரயில் நிலையங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

குண்டுகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[இ—3]

# கொசோவோவுக்குள் தரைப்படை அனுப்புவதுகுறித்துநேட்டோஆராய்வு

பெல்கிரேட். ஜூன் 1

யூகோஸ்லாவியா மீதான நேட்டோ படைகளின் வான் தாக்குதல் 70 ஆவது நாளாகத் தொடரும் அதேநேரம் கொசோவோவுக்கு தரைப் படையை அனுப்புவது தொடர்பாக நேட்டோ நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை கூடிய நேட்டோ நாடுகளில் பாதுகாப்பு அமைச்சர்கள் இது தொடர்பாக ஆராய்ந்தனர் என்றும் —

முதற்கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் கொண்ட தரைப்படையை அனுப்ப அவர்கள் இணங்கினர் என்றும்— பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் றொபெட்ஸன் தமது நாடு 50 ஆயிரம் துருப்புக்களைத் தருவதாக உறுதி அளித்தார்.

வான் தாக்குதல் மூலமே யூகோஸ்லாவியாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறோம். தரைப்படையை அனுப்பும் திட்டம் இன்னும் யோசனையாகவே இருந்து வருகிறது என்று நேட்டோ கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதேநேரம் — நேட்டோ படைகள் யூகோவின் பொருளாதார போக்குவரத்து, தொலைத்தொடர்பு சேவைகளை இலக்கு வைத்து வன் தாக்குதலைத் தொடர்கின்றன

நேற்று முன்தினம் இடம் பெற்ற தாக்குதலில் 11 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

பொதுமக்களின் உடைமைகள் பெருமளவில் நாசமானதாக யூகோ குற்றஞ்சாட்டியுள்ளது.

(இ-3)

# தென் ஆபிரிக்காவில் நாளை தேர்தல்

தென் ஆபிரிக்காவில் சகல இனமக்களும் பங்கு கொள்ளும் பொதுத்தேர்தல் நாளை நடைபெறவிருக்கின்றது.

அரசியலில் இருந்து ஓய்வு பெறும் தென்ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா கடைசிக் கூட்டம் ஒன்றில் பங்கு பற்றினார்.

புதிய அதிபர் பதவிக்கு போட்டியிடும் தாபே இன்பெக்கியை ஆதரிக்குமாறு அங்கு கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

(இ-3)

## தேவாலயம் ஒன்றில் வைத்து 45 பேர் கடத்தப்பட்டனர்

### கொலம்பியாவில் சம்பவம்

லண்டன் ஜூன் 1

கொலம்பியாவில் உள்ள ஒரு தேவாலயத்தில் ஞாயிறு திருப்பலியில் பங்கு கொண்டவர்களில் 45 பேர் ஆயுத முனையில் கடத்தப்பட்டுள்ளனர்.

கொலம்பியாக் கெரில்லாக்களே இவர்களைக் கடத்திச் சென்றனர்.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் ஆலய குரு இந்த 45 பேரில் அடங்கி உள்ளனர்.

டிரக் ஒன்றில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்களைத் தேடிப் படையினர் பெரும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

[இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

S. உதயகுமாரன் என்பவரின் வங்கிப் புத்தகங்களும் அத்துடன் ஓய்வூதியப் பத்திரங்கள், கடிதங்கள் அடங்கிய பொதியொன்று கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்த போது தவறிவிட்டது. இப் பொதியைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். க. ஈஸ்வரநாதபிள்ளை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
[66203]

### நெற்காணி விற்பனைக்கு

அராலி மத்தி. சிவன் கோயிலிலிருந்து, 100 யார் தூரத்தில் கிணற்றுடன் சேர்ந்த 15 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. தோட்டம் செய்யவும் உகந்தது. தொடர்பு: க. பூலோகரட்ணம், 22[58], இராமநாதன் வீதி, (நாச்சிமார் கோயிலடி) கலட்டி, யாழ்ப்பாணம்.
(66188)

### மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச்சேர்ந்த கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் 39 வயது உத்தராடம் நட்சத்திரம் ஆணுக்கு மணமகள் தேவை. தகுதியுடையோர் குறிப்பு மற்றும் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை கவனமாகத்திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல. 888, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(66236)

# தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்
# கொட்டில்களிலும் வீடுகளிலும்
# இயங்கும் 16 பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 16 பாடசாலைகள் தற்காலிக கொட்டில்களிலும், தனியார் வீடுகளிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 30 பாடசாலைகள் மட்டும் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

ஒரு சில பாடசாலைக் கட்டடங்களில் இரண்டு அல்லது மூன்று பாடசாலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மட்டும் இவ்வாறு ஆற பாடசாலைகள் செயற்படுகின்றன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பொன் பரமானந்த வித்தியாலயம், தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, காங்கேசன்துறை மகா வித்தியாலயம், வீமன்காமம் வித்தியாலயம், வறத்தலை விளான் அமெரிக்க மிஷன் பாடசாலை போன்ற இடம் பெயர்ந்த பாடசாலைகள் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் செயற்பட்டு வருகின்றன.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு அருகில் தற்காலிக கொட்டில்களிலும், வசாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம், உரும்பிராயிலுள்ள தனியார் வீடொன்றிலும், மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம் சுன்னாகத்தில் தனியார் வீடு மற்றும் கொட்டில்களிலும், கீரிமலை நகுலேஸ்வரர் வித்தியாலயம் சீரணிச் சந்தியிலும், மயிலிட்டி றோ. க. பாடசாலை மானிப்பாயிலும் தற்காலிக கொட்டில்களிலும், சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயம், அளவெட்டி சதானந்த வித்தியாலயக் கட்டடத்திலும், பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் பன்னாலையிலுள்ள தனியார் வீடொன்றிலும் இயங்கி வருகின்றன.

மேற்குறிப்பிட்டவற்றில் பல பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருப்பதால் அந்தப் பாடசாலைகளின் கட்டடங்களின் நிலைபற்றி அறியமுடியாதுள்ளதாக வலிகாமம் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன

இப் பாடசாலைகளில் ஒன்றான சீனன் கலட்டி ஞானோதயா பாடசாலைக் கட்டடம் முற்றாகத் தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## கூடைப்பந்தாட்டம்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை 'உதயன்' நிறுவன அனுசரணையுடன் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி பெண்கள்பிரிவு — யுத் கார்மல் வி. க. அணி எதிர் பல்கலைக்கழக 'ஏ' அணி

★ 5 மணி — ஆண்கள் பிரிவு — சென்ரலைட்ஸ் வி. க. அணி எதிர் ஜொலிஸ்ரார் வி. க. அணி. (இ-3)

## நாய்கள் தொல்லை

வலி. மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.
(இ-29)

## மலசலகூட குழியில் விழுந்த மாடு

அரியாலை, ஜூன் 1

தூர்ந்து போன மலசல கூடக் குழியில் இருந்து பசு மாடு ஒன்று மீட்கப்பட்ட சம்பவம் சுண்டிக்குளி பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

குடியிருப்பாளர்கள் மாட்டைத் துரத்திச் சென்ற போது மாடு மலசல கூடக் குழியில் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாட்டு உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து மாட்டை மலசல கூடக் குழியில் இருந்து மீட்டெடுத்தனர்.
(இ - 17)

## மின்சாரம்

சங்கானை, ஜூன் 1

சங்கானைப் பகுதியில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாமல் இருந்து வந்த பகுதியான நிற்சாமம் கிராமத்துக்கு கடந்த 20 ஆம் திகதி முதல் மின்சார விநியோகம் செய்யப்பட்டுள்ளது
(இ-29)

## குழாய் மூலம் குடிதண்ணீர்

அரியாலை, ஜூன் 1

கொழும்புத்துறை, சச்சமோட்டை, பாஷையூர் பகுதிகளுக்குக் குழாய் மூலம் குடிதண்ணீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இந்த நடவடிக்கைகளை யாழ் மாநகராட்சி மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இப்பகுதியில் நிலத்துக்கு அடியில் உள்ள குழாய்கள் பழுதுபார்க்கப்படுகின்றன. குடிதண்ணீர் பெறுவதற்கான பைப் தூண்கள் போடப்பட்டு வருகின்றன.
[இ-17]

## வர்த்தகத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வர்த்தக திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களை உள்ளடக்கி வர்த்தக தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம ஒன்று கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படவுள்ளது.

வர்த்தக திணைக்களம் கலைக்கப்படவுள்ளதை யடுத்தே மேற்படி சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பதினொரு இடங்களில் வர்த்தக திணைக்களத்தின் வியாபார நிலையங்கள் இயங்கி வருவதுடன் மாவட்டத்திலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகள் அனைத்துக்கும் உரிய உணவு விநியோகமும் மேற்படி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

135 ஊழியர்களைக் கொண்டு இயங்கும் இந்தத் திணைக்களத்தினை கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்வது தொடர்பான கூட்டமொன்று ஜூன் 9 ஆம் திகதி மேற்படி திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## மீள் குடியமர்வு, புனர்வாழ்வுப் பணி மாகாண சபையின் கீழ் இணைப்பு

வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் பணிகள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் இணைக்கப்படவிருக்கின்றன

வடமாகாணப் புனரமைப்புக்காக ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டு, அவரின் பொறுப்பில் இயங்கி வந்த இந்த அதிகாரசபையின் பணிகள், செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன

இதைத் தொடர்ந்து இதன் பணிகளை மாகாண சபையின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரசபையின் எந்த எந்த செயற்பாடுகளை எந்த அதிகாரத்தின் கீழ் மாகாண சபையிடம் கையளிப்பது என்பது தொடர்பாக ஆராய எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

இந்த அதிகார சபையை மாகாண சபையின் கீழ் கையளித்த பின்னர் வடக்குப் புனரமைப்பு நிதி மற்றும் உதவிகள் நேரடியாக மாகாண சபைக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
[இ-3]

## கடன் உதவி

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் கொக்குவில் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு சுப உதவிக் கடனாக மீன்பிடி வலையைக் கொள்வனவு செய்வதற்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்தக் கடன் சங்கத்தில் உள்ள பக்குத் தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளதாக இதன் தலைவர் சி. பொன்சியானூஸ் தெரிவித்தார். (இ-51)


உ

## அருளோங்கு ஸ்ரீமஹாமாரி அம்பாள் தேவஸ்தானம்

(பண்டாரி அம்மன் கோயில்)

தர்பசிட்டி
பருத்தித்துறை

மேற்படி ஆலயத்தில் திராவிட சிற்ப மரபுகளுக்கு அமைய நவீன முறையில் வசந்த மண்டபமும், யாக மண்டபமும் அமைப்பதற்குத் தகுதியுடைய சிற்பாசாரியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துறையில் தகுதியுடையோர் தகுந்த ஆதாரங்களுடன் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ 05-06 1999-க்கு முன் தொடர்பு கொள்ளவும் திறமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

நன்றி.

சி. சபாரத்தினதேசிகர்
ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்.

(66241)

தொல்புரம் கிழக்கு

## விக்கினேஸ்வரா சனசமூக நிலைய

வளர்ச்சி நிதிக்கான

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில்

பரிசு பெறுவோர் விவரம்

1 ஆம் பரிசு இல. 80
2 ஆம் பரிசு இல. 404
3 ஆம் பரிசு இல. 775

பத்து ஆறுதல் பரிசுகள்

இல. 1111, 1142, 360, 604, 2393, 2537, 139, 143, 2757, 2718.

பரிசில்களை 15-06-99 இற்கு முன்னர் நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

- நிர்வாகம்

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (66240)

## 1999 ஓகஸ்ட் க. பொ. த. (உயர்தரம்) கலை (ARTS)

மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினால் இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல்கள் சகல பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடம்: யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்

காலம்: 1999 - 06 - 03 வியாழக்கிழமை
முற்பகல் 9-30 — 12-30 தமிழ் / இந்துநாகரிகம்
பிற்பகல் 1-00 — 2-30 புவியியல்

1999 - 06 - 04 வெள்ளிக்கிழமை
முற்பகல் 9-30 — 12-30 தமிழ் / நாடகமும் அரங்கியலும்
பிற்பகல் 1-00 — 2-30 இந்துசமயம் / நாடகமும் அரங்கியலும்

தமிழ் மன்றம்
யாழ் பல்கலைக்கழகம்

(66242)


## கண்ணீர் அஞ்சலி

கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் ஆகிய

### தியாகராஜா ராஜ்குமார்

அவர்கள் 31—5-99 இல் அகால மரணமடைந்த செய்தியைக் கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு இச் சபையின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
நல்லூர் பிரதேச சபை.

[C/7727]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்ல முடியாத மாணவருக்கு உதவித் திட்டம்

வலிகாமம் தெற்கு, ஜூன் 1

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பகுதிகளில், பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்கள், அல்லது இடையில்விலகிய மாணவர்கள் வாய்ப்பு வசதிகள் இன்மையால் பாடசாலை செல்லாத மாணவர்கள் ஆகியோரை இனம் காணவும், அவர்களுக்கு விசேட தொழில் நுட்பம்சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கவும், மீண்டும் கல்வியைத் தொடர விரும்புபவர்களுக்கு அதற்கேற்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவும், வலிகாமம் கல்விவலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவினரும், கல்வி அபிவிருத்திப் பிரிவினரும் திட்டமொன்றை வகுத்து செயற்படுத்துகின்றனர்.

வலிகாமம் கல்விவலயஅபிவிருத்திப் பிரிவு உதவுக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், முறைசாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிவனேயனின் உதவியுடன் மேற்படி திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஆரம்ப பணிகளை மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டம் சம்பந்தமாக ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைகளில் இருந்து இடையில் விலகிய மாணவர்கள் பற்றிய தரவுகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டத்துக்குரிய மாணவர்களை இனம் காண்பதில், பாடசாலை அதிபர்கள் கிராமசேவையாளர்கள், சனசமூகநிலையங்கள் மற்றும் பொதுநிறுவனங்களின் உதவிகளும் பெறப்பட உள்ளன.

இனம் காணப்படும் பிள்ளைகள் மீண்டும் பாடசாலைகளில் சேர்ந்து கல்வியை தொடர விரும்பினால் அதற்கேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அவ்வாறு அவர்கள் கல்வியைத் தொடரும் பட்சத்தில் சேரும் வகுப்பில் இருந்து பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலையில் சேர விரும்பாத பிள்ளைகளுக்கு எழுத்தறிவூட்டல். ஆலோசனைகள் வழங்கலுடன், தொழிலுக்கு ஆதாரமான தொழில் முகவர்களுடன் தொடர்பு கொண்டு தொழிலுக்கான உத்தரவாதம் பெற்றுக் கொடுக்கப்படும்.

விசேட தொழில்நுட்ப ஆக்கங்களுக்குக் குறுகியகால பயிற்சி வழங்கவும் சிறார்களை மையமாக வைத்து நடத்தும் தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்கவும் ஆலோசனைகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறார்களின் வளர்ச்சியில் குறித்த காலத்தின் பின் இவர்களது பெயர்ப் பட்டியல்களைத் தேசிய இளைஞர் மன்றம், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-152)

## வலி. மேற்குப் பிரதேச செயலகத்துக்கு கட்டடம்

### சங்கானையில் அமையும்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வலி மேற்குப் பிரதேச செயலகத்துக்கு நிரந்தரமான கட்டடம் ஒன்றைச் சங்கானையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் ச. சிவதாசன் தெரிவித்தார்.

வலி.மேற்கு, வலி. தென் மேற்குப் பிரதேச சபைகளுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தபோதே ச. சிவதாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்கள் ஆசிரியர்களுடன் உரையாடி அங்குள்ள குறைகளை அவர் கேட்டறிந்தார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள சந்தைகளுக்கு விஜயம்செய்து அங்குள்ள சிறு வியாபாரிகள், நுகர்வோர் ஆகியோரதுபிரச்சினைகளைக் கேட்டறிந்து அவர் அவற்றைத் தீர்த்து வைப்பதாக உறுதி கூறினார். (இ)

## போக்குவரத்து இடையூறு; சாரதிக்கு அபராதம்

நெல்லியடி, ஜூன் 1

வீதியில் நீதிவானின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் லொறிச்சாரதி ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் சமீபத்தில் வலிகாமம் பிரிவிலுள்ள மருதனார்மடம் பகுதியில் இடம் பெற்றது.

இது குறித்து மருதனார் மடம் சந்தியில் காவல் கடமையிலீடுபட்ட பொலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக லொறிச் சாரதி, கைது செய்யப்பட்டு அன்றைய தினமே மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

லொறிச் சாரதியை எச்சரிக்கை செய்த மல்லாகம் மேலதிக நீதிவான் இ. த. விக்னராஜா பாதையில் இடைஞ்சல் கொடுத்த குற்றத்துக்காக ரூபா 250 அபராதம் விதித்து அப்பணத்தை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்குச் செலுத்துமாறும் அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டு அவரை விடுதலை செய்தார். (இ-109)

## சம்பளம்

வேலணை, ஜூன் 1

அதிபர் சேவைக்குரிய புதிய சம்பளத்திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்ட தீவக அதிபர்களுக்கு இம்மாதம் புதிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட தீவக வலயக் கல்விப் பணிமனையினால் மட்டுமே அதிபர்களுக்குரிய புதிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ - 167)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்கு 23 விருதுகள்

தென்மராட்சி, ஜூன் 1

இலங்கையில் உள்ள 306எ, 306பி, 306சி மாவட்டங்களைச்சேர்ந்த 70 லயன்ஸ் கழகங்களில் சிறந்த சேவையாற்றிய லயன்ஸ் கழகங்களுக்கான தெரிவில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் 23 விருதுகளைப் பெற்றது.

இலங்கை ரீதியில் இந்தக் கழகத்தைச் சேர்ந்த லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் அதி சிறந்த பிராந்தியத் தலைவராகவும், லயன் பா. விஜயகுமார் அதிசிறந்த கண்பார்வைக்குழு பிராந்தியத் தலைவராகவும் தெரிவாகினர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அதிசிறந்த சேவைக்காக மூன்றாம் இடத்தை பெற்றது.

சிறந்த செயலாண்மைக்கான அதிசிறப்பு விருதுகளில் கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையாவும் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

அத்துடன் வடபிராந்திய ரீதியில் அதிசிறந்த செயலாளர், பொருளாளர் ஆகிய விருதுகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் அ.பொ. செல்லையா, லயன் வீ. வீ. மகாலிங்கம் ஆகியோருக்கும் கிடைத்துள்ளன.

இவர்களுக்கான விருதுகள் கடந்த 15 ஆம் 16ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற லயன்ஸ் கழகங்களின் வருடாந்த மாநாட்டில் வழங்கப்பட்டன. (இ-117)

## மீள்குடியமர்வு நிதி கிடைக்கவில்லை

வலி, கிழக்கு, ஜூன் 1

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் 4 ஆயிரத்துக்குமேற்பட்ட குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுப் பணம் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. (இ-180)

## புனரமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையின் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க புனரமைப்புக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆ. சோமசுந்தரம் தலைமையில் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் (இ-க)

## ஜி. ரி. இஸட் உதவி

சுழிபுரம்: ஜூன் 1

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கட்டடத் திருத்த வேலைகள் மலசலகூடத் திருத்த வேலைகள் ஆகியவற்றை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும்.

ஆரம்ப வேலைகளுக்கான கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றை வலிகாமம் வலய கல்வி அதிகாரிகளின் அனுசரணையுடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் நடத்தினர்.

நிறுவன இணைப்பாளர் திருமதி இரான்வரன் [illegible] மலர் கருத்துரை வழங்கினார். (இ-28)

## சிரமதானம்

புன்னாலைக்கட்டுவன், ஜூன் 1

தருமவாரத்தை முன்னிட்டு புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய வெளிவீதி சிரமதானம் மூலம் கடந்த வியாழக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களும் ஆலய தொண்டர்களும் இணைந்து செயற்பட்டனர். (இ-133[

## குடியேற்றத் திட்டம்

வலி.கிழக்கு, ஜூன் 1

திருநெல்வேலி கொலனிக் கிராமத்தில் பல லட்ச ரூபா செலவில் வீட்டுக் குடியேற்றத்திட்டம் ஒன்றை அமைக்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த ஆண்டுக்கான பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தில் முதலில் 10 தொழிலாளர் குடும்பங்களுக்கு கல்வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. (இ-180)

## தேங்காய் திருட்டு

கோண்டாவில், ஜூன் 1

கொக்குவில் பகுதியில்தேங்காய்த் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

இரவு வேளைகளில் மட்டுமன்றி பகல் வேளைகளிலும் சன நடமாட்டம் குறைந்த பகுதிகளில் உள்ள வீடுகளில் [illegible] (இ-ரி]

---

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 — 01 — 1980 | 11 — 06 — 1998 |

செல்வன்

## துரைசிங்கம் தனேஸ்குமார்

திதி: 01.- 06 - 1999

தனேஸ் எனும் ஆண்கிளியே
உன் கலைத்திறமையால் எல்லோராலும்
விரும்பப்பட்ட மாடப் புறாவே ...
மருந்ததைக் கையில் எடுத்ததால்
மரணித்தாயா? இல்லை சதியா
மர்மத்தை நீ வந்து விளக்கிவிட்டால்
துவண்டு துன்பப்படாது எம் இதயங்கள்!
நீ வருவதற்கு முன்வேதனை நெருப்பால்
நாம் வெந்து கொண்டிருக்கின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சு. துரைசிங்கம் (பெயின்ரர்) மணியம் குடும்பத்தினர், மைத்துனி, உறவினர்கள், நண்பர்கள்.

கெருடாவில்,
சாவகச்சேரி.

[ 66135 ]

---

விண்ணக வாழ்வின்

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 16 — 05 — 1921 | 01 — 06 — 1989 |

## திருமதி அருளம்மா அந்தோனிப்பிள்ளை

கண்ணீரில் முகங்கழுவிப் பத்தாண்டிங்கே
காற்றாகப் பறந்ததுவே தாயே பொங்கும்
புண்ணியத்தின் பொன்வடிவே அம்மா!
அன்பைப் பொழிந்தெம்மை அரவணைந்த
பொறுமைக்குன்றே
வெண்ணிலவே நீ மறைய இருளின் ஊடே
வேதனைகள் தொடர்ந்துவரத் துடிக்கின்றோமே
விண்ணுலகிற் பரமபதம் வீற்றிருந்தே
வேண்டிடுவாய் என்றிரந்தே அஞ்சலித்தோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(66237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

புளியங்கூடல் கிராமசேவை அலுவலர்
திரு. மு. விஜயரெத்தினம்
அவர்களின் அன்புத்தாயார்


திருமதி
**பாக்கியம் முத்தையா**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு புளியங்கூடல் கிராம மக்கள் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையம்,**
**புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகம்.**

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (66235)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 01 |
| — | — |
| 12 | 06 |
| — | — |
| 1960 | 1998 |

அமரர்
## ஆறுமுகம்பிள்ளை சத்தியநாராயணன்
(ரகு)

மொட்டு மலர்ந்து காயானாய் — கனியமுன்
எம்மை விட்டுப் பிரிந்தனையே, உன் நினைவால்
நாம் வாடுகிறோம். உடலால் எம்மைவிட்டுப்
பிரிந்தாலும் உணர்வால் என்றும் எம்முடன்
— உன் நினைவுகள் தொடரும்.

**அப்பா, அம்மா, மனைவி, மக்கள்,**
**சகோதரர்கள், உறவினர்கள்,**
**நண்பர்கள்.**

251/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [66173

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 02 |
| — | — |
| 04 | 05 |
| — | — |
| 1933 | 1999 |

## திருமதி மகேஸ்வரி சிறீபதி

02-05-1999 காலமான எமது குடும்பத் தலைவி மகேஸ்வரி சிறீபதி அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (1-6-1999) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதைத்தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டும், அனுதாபச் செய்தியனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள்**

முருகதாஸ், பரமதாஸ், கண்ணதாஸ், (கனடா) கணேசதாஸ் (சுவிஸ்) அருள்தாஸ் (உடுப்பிட்டி).

**மருமக்கள்**

சரோஜினிதேவி (கொழும்பு), ரதிதேவி, புஸ்பரதி (கனடா), விஜிதா (சுவிஸ்), ராஜினி (உடுப்பிட்டி),

**பேரப்பிள்ளைகள்**

சிவாஜினி, லோஜினி, சுதர்ஜினி (கொழும்பு) சங்கீதா, ரூபிதா, சாருகன், அனுசன், மலரவன், ஆரணி, நூர்சன்.

தகவல்
**சிறீபதி அருள்தாஸ்**

சந்தைவீதி,
உடுப்பிட்டி. (66228)

# கப்பலில் கிழங்கு

அரியாலை, ஜூன் 1

கொழும்பில் இருந்து தனியார் வர்த்தகர்கள் கப்பல் மூலம் உருளைக்கிழங்கை தருவித்துள்ளனர்.

உருளைக்கிழங்கு யாழ்ப்பாணத்துக்கு வந்ததை அடுத்து கிழங்கின் விலை குறைந்துள்ளது.

140 ரூபாவாக முன்னர் விற்கப்பட்ட ஒரு கிலோ உருளைக்கிழங்கு தற்போது 90 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. (இ-17)

# மின்சாரம் இல்லை

புன்னாலைக்கட்டுவன், ஜூன் 1

அச்செழு வடக்கில் தேவாலயம் மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை.

இவர்கள் சுன்னாகம் மின்சார சபையுடன் பலதடவைகள் தொடர்பு கொண்டபோதும் இன்னும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-133)

# தாமதமாக கிடைத்த நேர்முகப்பரீட்சைக் கடிதம்

அச்சுவேலி, ஜூன் 1

நேர்முகப் பரீட்சை தொடர்பான அறிவித்தல் கடிதம் தாமதமாகக் கிடைத்தமையினால் தேசிய கல்வி நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''முதுகல்வியுக் மாணி' (எம். ஈ. டி) பாடநெறியில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் சேர்ந்துகொள்ள முடியவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் மே மாதம் 13 ஆம் திகதி நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்ற அறிவித்தல் கடிதம் நேர்முகப் பரீட்சை முடிவடைந்து பல நாள்களின் பின்னர் யாழ்மாவட்ட விண்ணப்பதாரிகளின் கையில் கிடைத்தது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-11]

# SIXTH YEAR REMEMBRANCE



In everloving memory of

**Primrose Pathmadevi Sabapathypillai**

Called to rest:
1st June 1993

Deep in our hearts you will always stay.

Fondly remembered by
Her Loved Ones

Primrose Cot'
Chavakachcheri. (C/7724)

# சைவசமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 1

இணுவில் இந்து சமய வளர்ச்சிச் சங்கம், இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபை ஆகியன இணைந்து சைவசமய அறிவுப்போட்டி ஒன்றை நடத்தவிருக்கின்றன.

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி நடத்தப்படும் இந்தப் போட்டி இம் மாதம் 28 ஆம் திகதி இடம்பெறும்.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-)

# உருவில் மகளிர் கல்லூரி

(Further Education)

G.A.Q. (வெளிவாரி)

(யாழ்., பேராதனை பல்கலைக்கழகங்கள்)
எமது சிறப்பு விரிவுரையாளர்கள்

| | |
|---|---|
| தமிழ் | — திருமதி பவசிங்கம் |
| இந்துநாகரிகம் | — திருமதி பவசிங்கம் |
| மெய்யியல் | — திரு. எஸ். எஸ். மனோகரன் |
| அளவையியல் | — திரு. எஸ்.எஸ். மனோகரன் |
| கிறிஸ்தவநாகரிகம் | — வண. A. S. தேவகுணாநந்தன் |
| ஆங்கிலம் | — திரு. ஆனந்தமகேஸ்வரன் |
| பொருளியல் | — திரு. சிவகுமார் |

விரிவுரைகள் ஆரம்பம் : 02-06-1999

B A (Part I) B,A (Part II) ஆகியவற்றுக்கான விரிவுரைகளும் புதிதாக ஆரம்பமாகின்றன.

தட்டெழுத்து (ஆங்கிலம் & தமிழ்)
சுருக்கெழுத்து, (ஆங்கிலம் & தமிழ்)

விசேட ஆங்கிலம்

ஆகியவற்றுக்கான புதிய வகுப்புகளும் இதே தினத்தில் ஆரம்பமாகின்றன.

— நிர்வாகி

(சி/7676)

# 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



## செல்வி சிவபாதசுந்தரம் ஜெயந்தினி

[யூனியன் கல்லூரி மாணவி]

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 19-07-1983 | 16-05-1995 |

திதி: 01-06-1999

தவம் பல கிடந்து பெற்றோமம்மா உன்னை நாங்கள்
தவியாய் தவிக்கவிட்டு தனியாய் சென்றதேனோ...
பலகாலம் வாழவேண்டி கோயிலெல்லாம்
கும்பிட்டோம்
சிலகாலம் வசழ்ந்து பாதியிலே ஏன் பிரிந்தாய்
ஆண்டு நான்கு ஆனதம்மா நீ மறைந்து
அன்றிருந்து ஆறவில்லை எங்கள் மனம்
தீராத கவலையுடன் காலத்தைக் கரைக்கின்றோம்
காலனவன் காரியத்தால் கண்ணீரில் கரைகின்றோம்

**அப்பா, அம்மா, தம்பி,**
**அம்மம்மா, உறவினர்கள்.**

ஐ. சிவபாதசுந்தரம் [பச்சாய்] (தந்தை),
ஐயனார் சைவ உணவகம்
ஐயனார் கொமினிகேசன் } உரிமையாளர்
சந்தைக் குத்தகை,
சுன்னாகம். (சி/7725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தவிர்க்க முடியாதா?

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உணவுப்பொருள்களையும் ஏனைய பாவனைப் பொருள்களையும் போதிய அளவில் எடுத்துச் செல்லும் விவகாரம் இன்னும் தீர்ந்தபாடில்லை

இது விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமானத்தோடும் நியாயமாகவும் நடந்து கொள்ளவில்லை என்ற தகவல்கள், கண்டனங்கள் வரும் போதெல்லாம் அரசாங்கம் அவற்றை மறுத்துரைத்து விடும். வன்னி மக்களுக்கு எந்தக் குறையும் உண்டாகாதவாறு உணவு மற்றும் பொருள்கள் அனுப்பப்படுவதாக "புள்ளி விவரங்களை" அள்ளி வீசும்.

கடந்துசென்ற மே மாதத்தில் வன்னிக்கு 65 லொறிகளில் மட்டுமே உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றன. ஆனால் 176 லொறி உணவுப் பொருள்கள் அப்பகுதி மக்களின் ஆகக் குறைந்த மாதாந்தத் தேவை.

போதிய உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் வன்னிக்கு அனுப்பப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த போதிலும், அரசு அதனை நீக்கும் விதத்தில் செயற்படுவதாக இல்லை வன்னியில் வாழ்பவர்களும் மக்களே, ஏனையோருக்கான தேவைகள் போன்றே அவர்களது தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற மனிதாபிமானமும் நியாய சிந்தையும் இருக்குமாயின் இனப்பிரச்சினை போன்று இதனையும் அரசு இழுபட விட்டிருக்காது

போக்குவரத்துத் தடைகள். பாதுகாப்புச் சோதனைகள் என்று தடங்கல்கள் தொடரவே செய்கின்றன. செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடாகிய பின்னரும் மாதாந்தத் தேவை பூர்த்தி செய்யப்படுவதில்லை என்றால் அது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

வன்னி மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் பொருள்களை அனுப்புவதில் அரசு தனது கடமையைச் சரிவரச் செய்கிறதென்றால், மனச்சாட்சிக்கு விரோதமில்லாத முறையில் செயற்படுகிறதென்றால் —

அதற்கு அபகீர்த்தி உண்டாக்கும் நோக்குடன் அரசுக்குள்ளேயே — அதன் அதிகாரிகளிடையிலேயே — ஒரு சதிகார சக்தி செயற்படுகிறது என்றே பொருள்படும்.

எனவே வன்னிக்கு உணவு மற்றும் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது திருப்திகரமாக நடைபெறவில்லை என்று முறைப்பாடு அல்லது தகவல் வந்ததும் —

அதனை மறுத்துரைப்பதற்கு விழுந்தடிப்பதைத் தவிர்த்து—

உண்மை நிலையை— நடைமுறையில் நிகழ்ந்ததை— இழைக்கப்படும் தவறை — அறிந்து கொண்டால் குற்றச்சாட்டுக்கள், குறைபாடுகளைத் தவிர்க்கலாம் அல்லவா? தவறு எங்கே உண்டெனஅறிந்து வன்னி மக்களுக்கு உதவலாம் அல்லவா? அரசு முயற்சிக்குமா?

# அகிலப் புகழ்பெற்ற அறிவுக்கூடம் இன்று பரிதாபத்துக்குரிய நிலையில்!

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வில், வரலாற்றில் யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் ஓர் உன்னதமான இடத்தைப் பல வழிகளில் பெற்றிருக்கின்றது; 1959 ஆம் ஆண்டு யாழ். மாநகர முதல்வராகப் பணிபுரிந்த சாம் ஏ. சபாபதி, வண. பிதா லோங் அடிகளார் போன்ற பலருடைய முயற்சியினாலும் ஆசிய பவுண்டேசன், இந்தியத் தூதரகம், அமெரிக்கத் தூதரகம் போன்ற வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உதவியினாலும் நிர்மாணிக்கப்பட்டு 11 - 10 - 1959 இல் முதல் இது செயற்பட ஆரம்பித்தது. இந்நூல்நிலையம்

### யாழ். நூல் நிலையம் தகனமாகிய பதினெட்டாவது ஆண்டு இன்று

விலை மதிக்கமுடியாத பல சிறந்த நூல்களை தன்னகத்தே கொண்டு விளங்கியது.

கலாநிதி ஆனந்தக்குமாரசாமி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வண பிதா ஞானப்பிரகாச அடிகளார் போன்ற பல தமிழ் அறிஞர்களின் படைப்புகள் மாத்திரமன்றி உலகில் வேறெங்கும் பெற முடியாத கையெழுத்துப் பிரதிகளும் இந்நூல் நிலையத்தில் இடம்பெற்றிருந்தன. யாழ்ப்பாண மக்களுக்கு மாத்திரமன்றி இலங்கையில் வாழும் மக்களுக்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் ஒரு களஞ்சியமாக யாழ் பொது நூல்

**க. அருள்நேசன்**

நிலையம் விளங்கியதுடன் தென்கிழக்காசியாவில் சிறந்த நூல்நிலையங்களில் ஒன்றாகவும் பிரகாசித்தது

இத்தகைய பல சிறப்பம்சங்களுடன் தேடுதற்கரிய 97,000 நூல்களை தன்னகத்தே பேணிப் பாதுகாத்து வந்த இந்நூல் நிலையத்தை, 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அப்போதைய ஆளுவோரின் காவல் துறையினரால் ஓர் ஏடுதானும் தப்பமுடியாத வண்ணம் எரித்துப் பொசுக்கிச் சாம்பராக்கி உலக வரலாற்றிலே தமக்கென்று அழிவுகாரர் என்ற இடத்தைத் தேடிக் கொண்டனர். இந்நூல்நிலையத் தகனம் ஒரு பண்பாட்டுக் கொலையாகும். கற்றோர் உள்ளத்தில் எல்லாம் பெரும் அதிர்ச்சியையும் பாதிப்பையும் ஏற்படுத்தியது. இந்நூல் நிலையம் தகனம் செய்யப்பட்டதை அன்றிரவே கேள்வியுற்ற பன்மொழிப் புலவர் வண. பிதா தாவீது [டேவிற்] அடிகளார் அதிர்ச்சியிலிருந்து மீளாது உயிரை விட்டது இதற்குச் சான்றாகும்.

**சாம்பர் மேட்டிலிருந்து**

இந்நிலை ஏற்பட்ட பிற்பாடும், தமிழ் இனம் தூங்கி விடாமல், அழிவைக் கண்டு அசந்துவிடாமல் தகனம் இடம் பெற்ற அந்த சாம்பர் மேட்டிலிருந்து அழிவையே ஆக்கமாகக் கொண்டு யாற்றிய மைக்க முன்னின்று செயற்படத் தொடங்கியது இதற்கு முதற்கட்டமாக நிதிசேகரிக்கப்பட்டது. இதற்காக புத்திஜீவிகளை உள்ளடக்கிய செயற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் ஏற்பாட்டில் நூலக கொடிவாரம், சுவர்ண முகி கலை நிகழ்ச்சி போன்றவை நடத்தப்பட்டதுடன் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழ் அமைப்புக்கள், வெளிநாட்டு — உள்நாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள், இந்து—கிறிஸ்தவ அமைப்புக்கள், தனியார் வங்கிகள். இலங்கையின் பல பாகங்களில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் ஆகியோர் தாராளமாக நிதியுதவி வழங்கி நூல்நிலையத்தைக் கட்டியெழுப்ப உறுதுணை புரிந்தனர்.

நிதி சேகரிப்பு ஒருபுறமிருக்க நூலக தகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆணைக்குழுவை நியமிக்கவேண்டும் என்று அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் அன்றைய ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா அவர்களைக் கோரினார். இக்கோரிக்கையை ஏற்ற ஜனாதிபதி. திரு லயனல் பெர்னாண்டோ தலைமையிலான ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்தினார். மேற்படி சம்பவத்தை ஆராய்ந்த ஆணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடாக வழங்குமாறு தீர்ப்பளித்தது.

மேற்படி சிபார்சை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி இந்த

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் சங்கம் மறுப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 1

"நேரடியாக மக்களைப் பாதிக்கும் வழக்குகளில் மட்டுமே ஆஜர்; சட்டத்தரணிகள் முடிவு" என்ற தலைப்பில் கடந்த 14ஆம் திகதி 'உதயன்' முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் மறுப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

13ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள். யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதியைச் சந்தித்து உரையாடிய சம்பவமே இடம்பெற்றது என்றும் —

அன்றைய தினம் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்றும் —

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள சங்கத்தின் தலைவரும், செயலாளரும் தெரிவித்துள்ளனர்.

**ஆசிரியர் குறிப்பு:**

உத்தியோகபூர்வமாகச் சங்கத்தின் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்று சங்கத்தின் தலைவரும், செயலாளரும் தெரிவிப்பதால் அதனை ஏற்றுக்கொள்வோம்.

அன்றைய தினம் யாழ். சட்டத்தரணிகள் கணிசமானோர் கூடி ஆராய்ந்து எடுத்த முடிவு என்ற அடிப்படையில் அவர்களில் சிலர் தெரிவித்த தகவலே அடுத்த நாள் உதயனில் வெளியிடப்பெற்றது. (ஆ-ர்)

**நாளை**

வைகாசி 19

புதன்கிழமை

திதி திருதியை

பிற்பகல் 5. 23வரை

நட்சத்திரம்: பூராடம்

முன் இரவு 11.14 வரை

சுபநேரம்: 4 22-5 52

ராகுகாலம் 11 52 - 1.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயனுக்கு**

நல்ல குணமுடைய ஒருவருக்குச் செய்யும் உதவியானது கருங்கல்லின் மேல் செதுக்கிய எழுத்தைப் போல அழியாது விளங்கும்.

— ஔவையார்

## வாசகர் திருமுகம்

### உயர் அதிகாரிகள் கவனத்துக்கு

கொடிகாமம் தபாற் கந்தோரின் தபால விநியோக எல்லைப் பரப்பில வாழும் பொதுமக்களின் தபால்கள் உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுவதில்லை. இது குறித்து ஊழியர்கள் அக்கறை எடுப்பதாகவோ அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகவோ தெரியவில்லை. இவர்களின் ஏனோதானோ என்ற மனப்போக்கினால் தேவையற்ற காலதாமதம் உண்டாகிறது.

சாவகச்சேரியில் குறிப்பிட்ட தினத்தில் ஒரு கடிதம் ஒருவருக்குக் கிடைக்கப் பெற்றால் அதனோடு முத்திரைத் திகதியிடப்பட்ட கடிதம் இருதினங்களாவது தாமதித்தே கொடிகாமம் தபால் எல்லைப் பகுதியில் வசிக்கும் விலாசதாரருக்குக் கிடைக்கின்றது இது ஏன்? எதற்காக இத்தாமதம் ஏற்படுத்தப்படுகிறது.

மேலும் பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் உரிய விலாசதாரரிடம் கையளிக்கப்படாமல் அந்த தபாலிற்குரியவரின் அயல் வீட்டிலோ அல்லது தெரிந்தவரிடமோ கொடுக்கப்படுகிறது. இதனால் விலாசதாரருக்கும் கடிதத்தைப் பெற்றுக்கொண்டவருக்கும் இடையில் வேண்டாத மனக்கசப்புக்களும் சந்தேகங்களும் உண்டாகின்றது இது குறித்து அஞ்சல் நிலைய அதிபரிடம் முறையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அஞ்சல் திணைக்கள உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்

கே. எஸ் குமார்

கொடிகாமம்.

### மீளக்குடியமர்வு கொடுப்பனவும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கும்

பலாலியை வாழ்விடமாகக் கொண்டவர்களுள் நானும் ஒருவன் என்ற முறையில் எழுதுகிறேன். நாம் இடம்பெயர்ந்து பத்து வருடங்களாகிவிட்டன இதுவரை காலமும் எமக்கு எதுவித கொடுப்பனவுகளோ, நஷ்டஈடுகளோ வழங்கப்படவில்லை இவ்வாறு இருக்கையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன் மீண்டும் மாபெரும் இடம்பெயர்வினை சந்தித்து ஆறு மாதங்களின் பின் மீண்டு அனைவரும் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறினர் ஆனால் பலாலி மக்களை உயர்பாதுகாப்பு வலயமெனக் கூறி அங்கு குடியேற அனுமதி மறுக்கப்பட்டது— மறுக்கப்பட்டு வருகின்றது

இந்நிலையில் அரசால் அனைவருக்கும் மீளக்குடியமர்வு நிவாரணமாக ரூபா ஐயாயிரம் வழங்கும்படி நிதி ஒதுக்கப்பட்டது இங்கு குறிப்பிட வேண்டியது என்னவெனில் ஆறு மாதங்கள் இடம்பெயர்ந்து இருந்து பின்னர் சொந்த இடங்களில் மீளக்குடியேறிய மக்கள் அனைவருக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது குறிப்பாக இவர்களில் அரச உத்தியோகம் பார்ப்போருக்கும், உயர் தொழில் புரிவோருக்கும் இன்னும் வசதி படைத்தவர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர்.

இவ்வாறாக வசதி படைத்தவர்களுக்கு முதலில் கொடுப்பனவு கிடைத்துவிட்ட நிலை கண்ட ஏழைக் குடும்பங்கள் கதி கலங்கி இதையாரிடம் கூறி முறையிடுவது எனத்தெரியாமல் விழிக்கின்றனர். இது குறித்து யாழ் அரசாங்க அதிபருக்கும் பல முறைப்பாடுகள் அனுப்பி இருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இது இப்படியிருக்கையில் மீளக்குடியமர்வு கொடுப்பனவுக்காக கோடிக்கணக்கான நிதி யாழ். செயலகத்திற்கு வந்தடைந்த செய்திகளை பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இக்கொடுப்பனவை யார் யாருக்கு முன்னுரிமை கொடுத்து. வழங்கவேண்டுமென்ற மனநிலை இதற்கு பொறுப்பான அதிகாரிகளுக்கு தெரியவில்லைப் போலும் அவர்களும் பாராமுகமாக இருக்கிறார்கள்.

மேலும் இந்த மீளக்குடியமர்வு பத்திரத்தில் முத்திரை ஒட்டிக் கையெழுத்து வைத்து, கிராமசேவகர் அனுப்பி பத்து மாதங்களும் கடந்துவிட்டன. எதுவித நன்மையும் ஏற்படவில்லை. கிராமசேவகரிடம் போய்க்கேட்டால் வங்கியில் போய்ப் பார்க்கும்படி கூறுகிறார் வங்கியில் போய்க் கேட்டால் கிராமசேவையாளரிடம் போய்க் கேளுங்கள் என்று கூறுகிறார்கள். இவ்விடயம் 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிற' கதையாகி விட்டது.

எனவே இதற்கு பொறுப்பான அதிகாரிகள் துரிதகதியில் உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் கொடுப்பனவை வழங்க ஆவன செய்வார்களா?

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில்

சி என். எச். சாளி

நவாலி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தில் பயணம் செய்ய அனுமதி கிடைத்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் பயணம்செய்ய கடந்த மே 14 ஆம் திகதி வரை பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

### தெல்லிப்பழை

ஆர். மகேந்திரமலர் (097475/பி), எஸ். கஜன் (096453/சி). வி. ராஜசேகரம் (097475/ஏ). ஏஸ். ஜெனிர்தா (096453/பி). பி. திரேசம்மா (101448/ஏ), எம். செந்தூரன் (0945921/சி), எஸ். சச்சிதானந்தன் (100198/ஏ). வி. மகேந்திரன் (099790/ஏ). கே. தயானந்தன் (091500/டி). கே. மகேஸ்வரம் (091500/சி).

கே. குலசிங்கம் (091500/பி), என். சாரதா (094592/ஈ), எஸ். கஜன் (100198/சி), எம். கே. குமரன் (094592/டி), எஸ். ஜனிர்தா (100198/பி), எஸ். மதிவதனி (094592/பி), எஸ் எம் ராஜநாயகம் (094592/ஏ). ஏ. பிரகலாதன் (095665/ஏ), கே. பத்மினி (093295/ஏ), டி. நவநீத் (101450/பி),

ஆர். தெய்வேந்திரா (101450/ஏ), எஸ். சோதியாழனி (101961/ஏ), என். மகேந்திரன் (094790/ஏ), ரி. சுவாமிநந்தன் (096314/பி), ரி. சின்னையா (094876/ஏ), வி. பாலசுப்பிரமணியம் (089138/ஏ), ரி. ரணசனி (100083/ஏ), எஸ் ஜீவதாசன் (093262/பி), கே. மோகனராஜகுமார் (102009/ஏ),

### உடுவில்

கே. வேலுப்பிள்ளை (100248/ஏ), எம். ஜெயக்குமார் [101229/ஏ], ஜி. பாலசுந்தரக்குருக்கள் [099720/ஏ], எம். விஜயகாந்[099253/ஏ]. எஸ் நிலக்சனன் [091356/டி], எம். சரஸ்வதி [101417/பி], எஸ் நிரோசன் [091356/சி], எஸ். கங்காதேவி [099227/]ஏ, என். ஆனந்தநடராஜா [100225/ஏ], எஸ். சுபேகா (091356/பி).

எஸ். மார்க்கண்டு[101417/ஏ], வி. கண்மணி (100248/பி), எஸ். ஏனோதாஸ் [100167/ஏ], எஸ். மகாதேவன் [100071பி/]பி, வி. சிவகுமார் [096495/ஏ], எஸ். நிதர்சன 091356/ஈ), ஆர். மகாலக்ஷ்மி [089816/பி], எம். ராஜேந்திரம் [089816/ஏ], ஆர். ஸ்ரீசண்முகராஜா [091356/ஏ], டாக்டர் என். வேலுப்பிள்ளை [099692/ஏ],

எஸ். சுகன் [100071/டி], கே. கந்தகுமார் [093383/ஏ[, கே. யோகராணி [093383/பி], என். திரியாம்பிகை [093383/சி], என். சித்திப்பரதன் [093383]டி]. எம். சிதம்பரப்பிள்ளை [093384/ஏ], கே. சேனாதிராசா [099750/ஏ], பி. செல்வராஜ [094433/பி], எஸ். கௌரீ [099750/பி], ஏ. பிரியவேந்தா [099667பி].

எஸ். ஆறுமுகம் (099667/ஏ), எஸ் விஷ்ணுகுமார் (096336/ஏ), எஸ். தம்பிராசா (102145/ஏ), ரி. சசிகலா (102145/பி). பி. தம்பிராசா (102145 / சி), என். சரஸ்வதி (099692/பி), ஆர். யோகம்மா(099801/பி)எஸ். ஜெயதீஸ்வரி (091356/எவ்), எஸ். மாலதி 100071/ஈ), என். கந்தசாமி (099611/ஏ),

கே. சுவேந்தினி (099611/பி), ரி. ராசரட்ணம் (099801/ஏ), எஸ். சிவாநந்தன் (100071/சி), எஸ். விமலாதேவி(099746/பி), ஆர். கலைவாணி (099801/சி). வி. சிவதயன் (099271/ஏ), கே. விராஜினி (099611/சி), ஏ. பரமேஸ்வரன்(099761/ஏ). ஜி சுசிலா(099613/ஏ), ஜி. ஐங்கரன்(099613/பி).

ரி. இந்திராணி(099756/பி), எஸ் ஆர். துரைசிங்கம் (099756/ஏ). என் செல்லையா(100071/ஏ), ரி. அமிர்தலிங்கம் (097631/ஏ), வை. தங்கரூடம் (101395/பி), டபிள்யூ பமீலா(092403/ஏ), டபிள்யூ ராசமணி (092404/ஏ), கே. சர்வேஸ்வரன் (093269/ஏ), எஸ். பத்மலீலா (093269/பி). எஸ். ரத்தினம் (093289/ஏ).

டபிள்யூ. ரத்தினம் (093289/பி). எம். விஜயவர்மன்(101402/ஏ), எஸ். காசிப்பிள்ளை(099752/ஏ), ஏ. தவமணிதேவி [099752/பி[, எஸ். துஷ்பந்தி [099752/சி], ஏ. ஸ்ரீனிவாசன் [094900/டி], பி. ஜெயநந்தன் [091746/ஏ], எஸ். ஜெயலட்சுமி [102071/ஏ], ஏ. சிந்துயா [099752/ஈ], எஸ், விஜயமலர் [101395/ஏ], யு. பஞ்சலிங்கம்[102025/ஏ], ரி. சுப்பிரமணியம் [513/சி], எஸ், நிதுசன் [ 513/பி ], எஸ். தசந்தன் [513/ஏ]. எஸ். மகேஸ்வரி(099160/ஏ), எம். ஸ்ரீகாந்தன் (101342/ஏ), எஸ். புஸ்பராஜா (093395/ஏ). ஏ. ஜெயநளினி (094512/பி). எஸ். சுசந்திகா (100017/பி), எஸ். நிரஞ்சலா (100017/ஏ).

எஸ். அம்பலப்பிள்ளை (094512/ஏ), ஜே. அமிர்தலிங்கம் (097631/பி), எஸ் காந்தரூபி (099177/பி), ஸ்ரீ. காந்ததேவிகா (101342/பி), பி. குருகுலசிங்கம் (101432/ஏ), பி. விபிதா (101353/ஏ), ரி. சிவகுமாரன் (101422/ஏ). ஏ பரமேஸ்வரன் (101353/பி). ஜே. பரமேஸ்வரன் (101353/சி), எம். காண்டீபன் (100242/ஏ/). எம். காண்டீபன் (100242/பி).

ஏ. அருள்நாயகி [101267'பி), எம். மயூரி (101267/சி)/ எம். தனுசா (100243/ஏ). ஆர். வடிவேல் (099763/ஏ. எம். நவரட்ணம் [101424) ஏ) ஏ. கோபாலகிருஷ்ணன் (100148/ஏ] எம். கணேஸ்வரன் (089559/ஏ) எஸ். பரமசோதி (091746/பி)/ எஸ். கனகரட்ணம் 091467/ஏ).

எஸ். வைரவன் (099177/ஏ) எம். வேலாயுதம் (097068/பி), எம். தர்மலிங்கம், [091470/பி] எம். தர்மலிங்கம் [091470/ஏ] கே. கனகரட்ணம் [091467/பி]. வி. சங்கரப்பிள்ளை (07667l/ஏ) எம். புஸ்பவாணி [097183/ஏ]. ஜே எம். ஞானமணி [097411/பி] எஸ். எஸ். மனோகரன் [090342/ஏ] ஆர். புவனேஸ்வரராஜா. [097309/ஏ]

கே. தரணீரா (100037/சி எஸ். வடிவாம்பிகை (100037/பி) எஸ். ராயபூபதி (076671/பி) பி. பிருந்தா (093322/ஏ)என். முருகதாஸ் (097183/பி] எம். மாணிக்கம் (097004/ஏ), என். நித்தியகலா (099113/)ஏ எஸ். செல்லப்பா(097308/பி) வே. வரதராஜா (101416/ஏ), எஸ் தர்மகுலசிங்கம் (097308/ஏ),

பி. அன்னலக்ஷ்மி (096456) பி), ஜி சுபத்திரா ([illegible] பி), எஸ். மஹாதேவி மலர் (097607/ஏ), ஏ. கனநாதன் (097388/ஏ), பி புஸ்பராணி (097664/ஏ), ரி. கோகிலாஜினி (097435/பி), கே. சுர்சினி (097450/ஏ), கே. சதியபாமா (097450/பி), கே. தீபராஜினி (097450/சி), கே. ராசரட்ணம் (097473/ஏ).

கே. ராசலிங்கம் (095696/ஏ), எல். சகுந்தலாதேவி (097108/பி), ரி. சந்திரசேகரன் (095523/சி) ஏ. நவரட்ணம் (095680/ஏ), ஏ. தர்சியா (095644/பி). எஸ். ராஜசேகரன் (095632/பி). எம். சந்திரலிங்கம் (095632/ஏ), எஸ் ஜே. ரெய்மன்ட் [095597/ஏ], பி. யோகேஸ்வரன் [095563/பி], ஏ. சிவதர்சனி [099752/டி).

கே. அப்புத்துரை [095531/ஏ]. ஜி மடுரங்கன் [099113/பி]. எஸ். சந்திரசேகர [095523/ஏ]. ஆர். இலங்கோவன் [095696/பி], எஸ். தர்மலிங்கம் (096417/பி). எஸ். பரமலிங்கம் (101986/ஏ), எஸ். வில்வியகிருஷ்ணன் (095236/பி), ஜி அன்னபூரணம் [097612/பி], எஸ். கஜானன் [095531/பி]. ஆர். ரவீந்திரராஜன் (101272/ஏ).

எம். சந்திரசேகரம் [099101/ஏ], ஏ. கிருஷ்ணசாமி [102043/ஏ], கே. ஜெருசலா [102043/பி], ஜி. பாஸ்கரன் [094743/டி], ஜி. பிரேமா [094743/ஏ], எஸ். நவீனம் [101311/ஏ], கே. கந்தகராஜா [099966/ஏ], எஸ். குருசாமி [094743/ஏ], பி. கந்தராஜா [099966/பி], ஏ. ராஜேந்திரன் [099728/ஏ].

ஐ. நல்லையா [100147/ஏ], என். விக்னேஸ்வரி [100147/பி], எஸ். ஜெகபதன் [102041/ஏ]. வை. திருநாவுக்கரசு [099489/ஏ], கே. கனகசபை [101954/ஏ], கே. குருசாம்பிகை [094743/பி], வி சிவதீலன் [095236/ஏ]. கே மகாலிங்கம் [099917/ஏ]. ரி. ரட்ணம் [094893/ஏ], பி. ஐ. ஸ்ரீநிவாசன் [094900/ஏ],

பி. ஸ்ரீநிவாசன் [094900/பி), பி. ஸ்ரீநிவாசன் (094900 சி], எம். தயாகரன் ]099140/ஏ], ஜி. அர்ச்சனா [099113/சி], ஈ. திருவிலிங்கம் [099701/ஏ], ஜி. காலிதர் [097612/ஏ]. எம். ரஜினா [099122/ஏ],

### வேலணை

வி. பார்வதிதேவி (11212/ஏ). ஏ சின்னத்தங்கம் [11141/பி]. ரி. மகேஸ்வரி (11076/பி). என். நவரட்ணம் [11061/ஏ]. என். ரமணன் [11269/ஏ] எஸ் தர்மலிங்கம் [11076/ஏ[, எம். வை. அரபாத் [11276/சி], வி. கண்மணி [11313/பி] கே. இல்லைமலர் ]11313/ஏ] எஸ். பாருன் [11297/ஏ]

ஜி ஜே ஐம்சன (11312/சி) ஜி மோகமலர் (11312/பி) வை. கருணேசமூர்த்தி [11312/ஏ). ரி. திருலோகாயுதம் (11305/ஏ). பி கிருஷாந்தி (11304/சி). பி. ரூபலதா (11304/பி). ரி ஜெனின்பநாதன் (11304/ஏ). வி. சிவராசா (10680/ஏ). எச். ஜசானி (11276/எவ்). எம். விசாலாட்சியம்மா (11239/ஏ).

எ. சமீதை (11276/டி). ஆர். கிருஷ்ணாத்(096948/ஏ), எம். ஜெசீமா (11276/பி), எம். ஆர் எம். மொகிதீன் (11276/ஏ), எம் கே. ஜே. பரிவீன் (11249/சி). எம். கே. முபின் (11249/பி). ரி. ஹமீதா (11249/ஏ), கே. ருக்குமணி [11260/ஏ), வி. வினோத் (11269/பி). எஸ். ஆறுமுகம் (11231/ஏ), ஜே. கந்தையா (10514/ஏ), கே. பாலசிங்கம் (11300/ஏ), கே. விநாயகமூர்த்தி (11246/ஏ), ஐ. சிவதாஸ் (11250/ஏ), எச். முபீன் (11276/ஏ).

(முற்றும்)

(இ-ரி)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் ஜூன் 1

மாதனை கண்ணகி அம்மன் கோயில் வருடாந்த பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்தவாரம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமான கண்ணகி அம்மன் வரலாறு படிக்கும் நிகழ்ச்சி இன்று பூர்த்தியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [இ-7]

★ ★ ★

நல்லூர், ஜூன் 1

கொக்குவில் தலையாளி ஞானவைரவர் ஆலய சகஸ்ர சங்காபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது [க-111]

★ ★ ★

புத்தூர்கிழக்கு வீரவாணி சத்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். [க-30]

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 1

தென்புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுளளது. [க-173]

வடமராட்சி வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் மணவாளக்கோல உற்சவமும் 1008 சங்காபிஷேகமும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும்.

மணவாளக் கோலத்தை ஒட்டிய ஸ்ரீதேவி, பூதேவி சமேதமஹா விஷ்ணு திருக்கல்யாண உற்சவம் அன்றைய தினம் இரவு 7 மணிக்கு இடம் பெறும் [க-173]

★ ★ ★

தென்மராட்சி, ஜூன் 1

வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று திங்கட்கிழமை பொங்கல் உற்சவத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-117)

★ ★ ★

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை மகா சங்காபிஷேகம் இடம் பெறும் [க-117]

# அகிலப் புகழ்பெற்ற....

[ 7ஆம் பக்கத்தொடர்]

நட்ட நிதியை ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்குவதாக ஒப்புக்கொண்டார். இதன் முதற் கட்டமாக இருபது லட்சம் ரூபாவைக் கொடுக்கத் தீர்மானித்து அப்பணம் உபயோகப்படுத்தி கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டவுடன் மிகுதி எண்பது லட்சமும் நூல்கள் வாங்குவதற்கு வழங்கப்படும் எனவும் ஏற்றுக் கொண்டார். இதன் பிரகாரம் யாழ். நூல் நிலையத்திற்கு முதற் கட்டமாக ரூபா இருபது லட்சம் வழங்கப்பட்டது. இந்த இருபது லட்சத்துடன் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட நிதியுமாக மொத்தம் 52, 39.357 ரூபா 71 சதம் எனக் கணக்கிடப்பட்டு புதிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் பயனாக மீள்விக்கப்பட்ட நூல் நிலையம் கீழ்த்தளத்தில் வாசகசாலைப் பகுதி, சிறுவர்பகுதி, உடனுதவும் பகுதி ஆகியன இடைக்கால ஒழுங்காக 10-12-1982 ஆம் திகதியிலும், இரவல் கொடுக்கும் பகுதி14-07-1983 ஆம் திகதியிலும் திறந்து வைக்கப்பட்டன. மூன்றாவது கட்டமாக மேற்குப் புறமாகக் கட்டடம் அமைக்கப்பட்டு 04-06-1984 ஆம்திகதி திறந்து வைக்கப்பட்டது இவ் வேலைத் திட்டத்திற்காக அப்போது மொத்தம் ரூபா 15,42,061 ரூபா [illegible] செய்யப்பட்டது. இதன் பிற்பாடு மிகுதி நிதியில் இருந்து நூலகக் கட்டட, புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களை தொடர்ந்து இன்னலில் ஆழ்த்தி வரும் யுத்த சூழ்நிலை காரணமாக அனைத்து வேலைகளும் கைவிடப்பட்டன. அது மட்டுமன்றி அப்பொழுது இயங்கிக்கொண்டிருந்த நூலகத்தின் செயற்பாடுகளையும் கைவிடப்பட வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது.

### தற்போதைய பரிதாப நிலை

கல்விக்கு உதவும் நிலையமாகவும், எமது கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் இருப்பிடமாகவும் பொக்கிசமாகவும் விளங்கிய இந் நூல் நிலையம் தற்போது அனைத்துப்பொலிவுகளையும் இழந்து சமூக சீர்கேடுகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு பாழடைந்த மண்டபமாகக் காட்சி தருவதுடன் நாற்புறமும் பற்றைகளால் சூழப்பட்டு அதன் நடுவே தனது பழைய கம்பீரமான தோற்றத்தை இழந்து காணப்படுகின்றது.

இந்நூல் நிலையத்தின் ஆரம்ப கர்த்தாவாக விளங்கிய வண பிதா லோங் அடிகளாரின் உருவச்சிலை உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது நூலகத்தின் முன்புறமாக அமைந்துள்ள கல்விக்கும். கலைக்கும் அரசியான சரஸ்வதி சிலை நீரற்ற தடாகத்திலுள்ள தாமரையின் பொலிவிழந்து காணப்படுகின்றது.

இந்நூல் நிலையத்தில் உட்புறம் தூசி படிந்தும், புகையும் கரியும் படிந்தும் புராதன காலத்துக் கட்டடம் போலக் காட்சி தருகின்றது. தூர்ந்து போன பங்கர்களும், மண் மூடைகளும் யுத்தச் சூழ்நிலையை மீண்டும் மனக்கண் முன் நிழலாட வைக்கின்றன. அது மட்டுமல்லாமல் மலசலம் கழிக்கும் கூடமாகவும், போதைவஸ்து பிரியர்களின் தங்குமிடமாகவும், விபச்சாரம் — சிறுவர் பாலியல் போன்றவற்றில் ஈடுபடுவோரின் விடுதியாகவும், சூதாட்டக்காரரின் இல்லிடமாகவும், கட்டாக்காலி நாய்களின் உறைவிடமாகவும், காதல் சல்லாபம் புரிந்து தங்கள் உணர்வுகளை பகிர்ந்துகொள்ளும் காதலரின் உல்லாச விடுதியாகவும் புகழ்பொலிந்த அறிவுக்கூடம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. முன்பு வள்ளுவர் குறளோவியம் தொங்கிய உட்புற சுவர்களில் காதல் வசனங்களும், உச்சரிக்க முடியாத கேவலமான வார்த்தைகளும் வரையப்பட்டுள்ளன.

இந்நூலகம் இப்படியே கைவிடப்படுமாக இருந்தால் எதிர்கால சந்ததிக்கு இது ஒரு பண்டைக்கால நினைவுச் சின்னமாக மாறிவிடும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழ் மக்கள் இது குறித்துக் கரிசனைப்பட வேண்டியது அவசியம். இல்லையேல் காலமும், எதிர்காலச் சந்ததியும் எம்மை இகழும்.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கந்தர்மடத்தில் காயமடைந்தவர் பேட்டி:

# மோ. சைக்கிள் சென்ற கையோடு படபடவென சூட்டுச் சத்தம் கேட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 1

'யாழ். கந்தர்மடம் பழம் வீதியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று என்னைக் கடந்துசென்ற சிலகணங்களில் வெடிச்சத்தங்கள் படபட வெனக் கேட்டன. அப்பொழுது எனது வலது பக்கத் தொடையில் நெருப்புச் சுட்டது போல் இருந்தது.

நேற்றுக் காலை கந்தர் மடத்தில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த சடையன் மாணிக்கம் (வயது 65) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் அவர் இச்சம்பவம் தொடர்பாக மேலும் விவரிக்கையில் கூறியதாவது:-

''நான் நேற்றுக்காலை 9.30 மணியளவில் அந்த வீதியில் வெற்றிலை வாங்குவதற்காகச் சென்றுகொண்டிருந்தேன். இங்குள்ள ஞானசோதி ச. ச. நிலையம் முன்பாக தெற்கு பக்கத்திலிருந்து வடக்கு நோக்கி இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். மோட்டார் சைக்கிள் என்னைக் கடந்து சென்றதும் 'பட பட' வென துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டன.

அச்சமயம் எனது வலப்பக்கத் தொடையில் நெருப்புச் சுட்டது போல இருந்தது. துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களைத் தொடர்ந்து நான் கீழே விழுந்து தவழ்ந்து தவழ்ந்து அருகிலுள்ள எங்களதுவீட்டிற்குள் சென்றேன். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியை பின்னரே நான் அறிந்து கொண்டேன் — என்று அவர் மேலும் தெரிவித்தார். [ஐ-5-ரி]

# 'கலாபூஷணம்' விருதுத் தெரிவு குறித்து அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு, ஜூன் 1

கலாச்சாரத் திணைக்களத்தால் நியமிக்கப்படும் தகுதி வாய்ந்த ஒரு கலாச்சாரக் குழுவின் தீர்மானத்தின் படியே 'கலாபூஷணம்' விருது வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரியுள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தங்கள் திணைக்களத்தால் வருடம் தோறும் வழங்கப்பட்டு வரும் கலாபூஷணம் விருதுக்கான வயதெல்லை 60 ஆக இருக்க வேண்டும் என்ற நடைமுறை இன்று வரை தொடர்ந்து இருந்து வருகின்றது. இந்த வயதெல்லை நடைமுறையை மீள் பரிசிலனை செய்யுமாறும்—

'கலாபூஷணம்' விருது அவரவர் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ப வழங்கப்பட வேண்டும் என்றும்—

கோருகிறோம்.

'கலாபூஷணம்' விருது பெறத் தகுதியுடையோர் பெயர் விவரம் அந்தந்தப் பிரதேச கிராம சேவையாளர்கள், அரசாங்க அதிபர் போன்றோரே தீர்மானித்து வருகின்றனர். இவர்களுடன் தங்களது திணைக்களத்தால் நியமிக்கப்படும் தகுதி வாய்ந்த ஒரு கலாச்சாரக் குழுவின் தீர்மானத்தின் படியே இந்த விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் பரிசிலிக்கும்படி கோருகின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-6]

# பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப்போட்டி வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

4 ஆம் திகதி வாசிப்பு, பேச்சு, பாஓதல், தனிநடனம், தனிஇசை, தமிழ்அறிவு வினா விடை, விவாதம், இலக்கிய நாடகம் ஆகிய போட்டிகளும் —

5 ஆம் திகதி குழு இசை, குழு நடனம், நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து ஆகியபோட்டிகளும் யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் [ஸ்ரான்லிக் கல்லூரி] நடைபெறும்

7 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் மாகாண மாவட்ட எழுத்தாக்கல் போட்டி நடைபெறும்.

வலிகாமம் கல்வி வலயத்தில் வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலாம் இடம் பெற்றவர்களை மாவட்ட மட்டத்திலான மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கோரி உள்ளார். [இ-5]

# மடு உற்சவம் குறித்து ஆராய்வதற்கு மாநாடு

மன்னார், ஜூன் 1

மடுத்தேவாலயத்தில் உற்சவம் நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக எதிர் வரும் 4 ஆம் திகதி மன்னார் செயலகத்தில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

மன்னார் அரச அதிபர் எஸ் எம். குறூஸ் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் உற்சவத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள், அங்கு கூடும் பக்தர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய வசதிகள் தொடர்பாக ஆராயப்படும்.

மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசேப்பும் இதில் கலந்து கொள்வார் [இ-3]


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி

முதலாம்/இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை 1999

08 – 05 – 99, 15 – 05 – 99 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறிப் பரீட்சைகள் 05 – 06 – 99, 12 – 06 – 99 ஆகிய திகதிகளில் நடைபெறும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

= பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

(சி/7729)


## பரிசளிப்பு

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு அம்பாள் விளையாட்டு கழகத்தினரால் நடத்தப்பட்ட சமய பாட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமைமாலை 6.30 மணிக்கு சுதுமலை அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (க-139)


A/L 2001 MATHS

பிரிவு II — ஆரம்பம்

02 - 06 - 99 புதன்

6-15 a. m.

ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

◎ O/L DAY CLASS

◎ தரம் 5 தொடக்கம் 11 வரை

சிறந்த பெறுபேறுகளுக்கு

SHAMROCK

(சி/7733)


# கூ. சங்கங்கள் தரம் பிரிப்பு

வலி. கிழக்கு, ஜூன் 1

வடக்கு—கிழக்குமாகாணத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டுத் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ''ஏ'' தரத்திலான சங்கங்களாக யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், வலி. கிழக்கு அச்சுவேலி வடபகுதி பல நோக்குக் கூட்டுறவு சங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 22 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளின் அடிப்படையில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அவை 4 தரங்களாகப் பிரிக்கப்பட்டன. (ஐ-180]

# பஸ் சேவை ஆரம்பிக்க முடியாத நிலை

நெல்லியடி, ஜூன் 1

755 ஆம் இலக்க நாகர் கோயில் பஸ்சேவையை ஆரம்பிக்குமாறு, பருத்தித்துறை சிவில் நிர்வாகஇணைப்பதிகாரி பிரிகேடியர் சரத் கருணரட்ண வலியுறுத்தியிருந்த போதும் சிறிய ரக பஸ் பருத்தித்துறை டிப்போவில் இன்மையால் இச்சேவையை ஆரம்பிக்கமேலும் சில மாதங்கள் செல்லுமென தெரிய வருகின்றது. [இ-109]

# அனுமதிபெறாது இயங்கிய பலகடைகள் மூடப்பட்டன

வலிகாமம்தெற்கு, ஜூன் 1

பாதுகாப்புப் படையினரின் விசேட அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கி வந்த பல வியாபார நிறுவனங்கள் படையினரின் உத்தரவின் பேரில் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

உடுவில் மல்வம், டச்சுவீதி, மருதனார்மடம் போன்ற இடங்களிலேயே வியாபார நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரியில் பாதுகாப்புப் படையினரால் விசேட அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டன.

விண்ணப்பப் படிவங்களை வியாபார நிறுவன உரிமையாளர் பலர் பெற்றுக்கொண்ட போதும் அவற்றைப் பூரணப்படுத்தி படையினரின் விசேட அனுமதியைப் பெறத் தவறிவிட்டனர் என்றும்—

கடந்த வாரம் திடீரென படையினரால் அனுமதிப்பத்திரங்கள் பரிசீலிக்கப்பட்ட போது பல வியாபாரிகள் அவற்றைப் பெறாமல் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது எனவும்—

அவ்வாறான வியாபாரநிறுவனங்களை மறு அறிவித்தல் தரும் வரை திறக்கக் கூடாது எனப் படையினர் அறிவித்துள்ளதாகவும்—தெரிகிறது.

கடந்த வியாழக்கிழமை முதல் பலகடைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன. [ஐ-152]


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபை உப தலைவர்

உயர்திரு

**தியாகராஜா ராஜ்குமார்**

அவர்களின்

அகால மரணச் செய்தி கேட்டு பெரிதும் அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

தலைவர்,

உறுப்பினர்கள், பணியாளர்கள்.

பருத்தித்துறை பிரதேச சபை,

புலோலி.

(சி/7736)



## மரண அறிவித்தல்

**திருமதி சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை**

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை 30 - 5 - 1999 அன்று காலமானார்.

அன்னார் புதூரைச் சேர்ந்த வண்டன் சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், சிறிகாந்தன் [உயர் தொழில் நுட்ப நிறுவனம், திருநெல்வேலி], பங்கயச்செல்வி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புருசோத்தமனின் சிறியதாயாரும், திருமதி ஜெகநாதன் சோதிப்பிள்ளை [குஞ்சு] ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மழவராயர் [கொழும்பு], பிரகாஷ் [இந்தியா], சரஸ்வதி [சமூக சேவைகள் மன்றம்] ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31 - 5 - 1999 அன்று அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் குடும்பமயானத்தில் தகனம்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:

சு. சிறிகாந்

[மகன்]

சிறுப்பிட்டி, புத்தூர்.

[சி/7735]



## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்திய சாலையில் எம்முடன் கடமையாற்றும்

திருமதி ச. கௌரீஸ்வரி

அவர்களின் அன்புக் கணவரான

**பொன்னுத்துரை சண்முகலிங்கம்**

(யாழ். போதனா வைத்தியசாலை)

அவர்களின் மறைவுக்கு எங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,

யாழ். போதனா வைத்தியசாலை.

(சி/7728)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கான உணவை அதிகரிக்க கொழும்பு மாநாட்டில் கோரிக்கை

## அரச அதிபர்கள் விருத்தனர்

கொழும்பு, ஜூன் 1

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்களின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்று அப்பகுதி அரச அதிபர்கள் கோரி உள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தலைமையில் நேற்றுகொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் வைத்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் வடக்கு. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள் மாகாணசபை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட கிளிநொச்சி அரச அதிபர் எஸ். இராசநாயகம் முல்லைத்தீவு அரச அதிபர் இ. தர்மகுலசிங்கம் மன்னார் அரச அதிபர் குருஸ் ஆகியோர் தத்தமது மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனுப்பப்படும் மருந்து வகைகள் போதாது;—அங்கு தொற்று நோய்கள் அதிகரித்து வருகின்றது; எனவே கூடிய மருந்துப்பொருள்களை அனுப்புவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க வெண்டும் என்று முல்லைத்தீவு அரச அதிபர் கோரினார்.

வன்னிக்கான மருந்துப் பொருள்களுக்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே வழங்கி விட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பற்றாக்குறை காரணமாக சுகாதார அமைச்சு மருந்துப் பொருள்களை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை —

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மிக மோசமாகச் சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

மன்னார் தெற்கு கடற் பிராந்தியத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களின் வலைகளையும் மீன்களையும் அபகரித்துச் செல்வதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் கோரப்பட்டது.

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனவும், யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். குடாநாட்டின் சிவில் நிர்வாக நிலை குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படவில்லை எனத்தெரியவந்தது.

[ஐ-6-21]

## கடமைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தம்மிடம் தெரிவிக்குமாறும் கேட்டிருந்தார்.

இதனையடுத்து நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் செயலக ஊழியர்கள் அனைவரும் கூடிக் கலந்துரையாடினர்.

தமக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் மேற்படி இரு நாள்களும் கடமைக்குச் சமுகமளிக்க முடியாது என்று இராணுவத் தளபதியிடம் தெரிவிக்குமாறு செயலக ஊழியர்கள் மேலதிக அரச அதிபரைக் கேட்டுக் கொண்டனர்.

வடபகுதி இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா யாழ். நகரிலுள்ள 512 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் வைத்து இன்று மீண்டும் அரச திணைக்களம் மற்றும் கூட்டுத்தாபனத் தலைவர்களை இந்த விடயம் தொடர்பாகச் சந்தித்துப் பேசவுள்ளார்.

(ஐ-5)

## சிநேரர்...

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞானம் உமா [வயது 28 — ஆவரங்கால் புத்தூர்), செல்லையா யோகேஸ்வரன் [வயது 25 — ஆனைக் கோட்டை]. செல்வரெத்தினம் தினேஸ்குமார் (வயது 21 — தாவடி தெற்கு] ஆகியோரே முன்னர் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூவரும் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-ரி)

## ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை—

சுட்டுக் கொல்லப்பட்ட நல்லூர் பிரதேச சபை உபதலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நகரில் உள்ள ஈ பி டி.பி. தலைமை அலுவலகத்திலும், பிரதேச பணிமனைகளிலும் நேற்றுக் கறுப்புக்கொடிகளும், வாழை, தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. [ஐ-5-6-17-15-173]

## தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்

தயாபரன் [தயா] நேற்று நண்பகல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவரது மரணத்தை அடுத்து அச் சம்பவத்தில் பலியானோரின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

தேசிய துணைப்படைப் பொறுப்பாளரான ராஸிக்கும் மற்றொருவரும் சம்பவம் நடந்த இடத்தில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

[ஐ-21-6)

# உலகக்கிண்ண கிரிக்கெட்

## பங்களாதேஷ், நியுசிலாந்து நேற்று வெற்றியீட்டின

லண்டன், ஜூன் 1

உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் நேற்று நடைபெற்ற கடைசி ஆட்டங்களில் பங்களாதேஷ் அணியும் நியூஸிலாந்து அணியும் வெற்றிபெற்றன.

பாகிஸ்தான் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி 44.3 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. பங்களாதேஷ் அணி 62ஓட்டங்களால் வென்றது.

நியூஸிலாந்துக்கும் ஸ்கொட்லாந்துக்கும் இடையில் நடைபெற்ற அடுத்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 121 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர்ஆடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 122 ஓட்டங்களைப் பெற்று வென்றது.

(ஐ-6)

## ஈ. பி. டி. பி.

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப் படுவோரால் சுடப்பட்டனர்.

சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. மிகச் சிறிய கைக்கு அடக்கமான மைக்ரோ பிஸ்டல் ஒன்றும், ஒன்பது எம். எம். பிஸ்டல் ஒன்றுமே கொலையாளிகளால் பாவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சூட்டுக்கு இலக்கான இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அவ்வழியே சென்று கொண்டிருந்த வழிப்போக்கரான சடையர் மாணிக்கம் என்ற 65 வயது வயோதிபரும் இச்சம்பவத்தில் காலில் காயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பிரதேசசபைஉறுப்பினரின் மைத்துனரான பரமேஸ்வரன் வன்னியில் மடு அகதி முகாமில் தங்கியிருந்த பின்னர் அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்று கப்பல் மூலம் மூன்று நான்கு நாள்களுக்கு முன்னர் தான் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

அவருக்குக் குடாநாட்டில் வசிப்பதற்கு வழங்கப்படும் விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுப்பதற்காக அவரையும் கூட்டிக் கொண்டு இராணுவ முகாம் ஒன்றுக்கு மைத்துனரான பிரதேச சபையின் உப தலைவர் புறப்பட்டுச் சென்றபோதே இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இவரது தலையின் பின் பக்கத்திலும், நெஞ்சுப் பகுதியிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சுட்டுகொல்லப்பட்ட இருவரது சடலங்களும் காலை 9-30மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை சம்பவம் நடந்த இடத்தில் கிடக்கக் காணப்பட்டன.

சம்பவத்தின் பின்னர் ஈ. பி. டி. பி. உறுப்பினர்களும் மற்றும் பொலீஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதிக்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டபோதும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை கைது செய்ய முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மாலை 3-00 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திலிருந்து யாழ். பொலீஸாரினால் மீட்கப்பட்ட இரு சடலங்களும் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட நல்லூர் பிரதேச சபை உபதலைவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவருடன் சேர்த்து இதுவரை ஈ பி டி. பியைச் சேர்ந்த 5 பிரதேச சபை உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் இதுவரை யாழ். நகர மேயர்கள் இருவர் உட்பட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் 10 பேர் படுகொலை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5-6-15-17-51-86-180]

## அதிபர்களுக்கு புதிய சம்பளம்

வேலணை, ஜூன் 1

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவைக்குரிய புதிய சம்பளத் திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்ட அதிபர்களுக்கு இம்மாதம் அவர்களுக்குரிய புதிய சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-167)

## மடு...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் தமது பாதுகாப்புக் குறித்து அச்சமடைவர் எனவே அடுத்த மாதம் நடைபெறவுள்ள உற்சவம் குறித்து நாளை மறுதினம் வியாழக்கிழமை மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க குருமார்கள் கூடி ஆராயவுள்ளோம்.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய நிலையில் உற்சவத்தை நடத்துவதா இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கப்படும். உற்சவத்தை நடத்துவதாக இருந்தால் அது குறித்து விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொண்டு அவர்களது ஒத்துழைப்புப் பெறப்படும்.

அவ்வாறே படையினரது ஒத்துழைப்பும் பெறப்படும் இரு பகுதியினரும் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்திலேயே உற்சவம் நடைபெறும் என்றும் அவர் [illegible].

[ஐ-6-164]

## எதிரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தண்டனை நிறைவேற்றப்படும் என்று நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மும்பாயைச் சேர்ந்த ரீற்றா கொழும்பு காக்கைதீவு கடற்கரையில் இலங்கையரான தனது கணவர் மனோகரனுடன் சென்று கொண்டிருந்த போது கணவரைத் தாக்கிவிட்டு ரீற்றாவை கடத்திச் சென்றபின் கற்பழித்து கொலை செய்ததாக நால்வர் மீதும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவர்களில் ஒருவர் அரச தரப்பு சாட்சியாக மாறினார். ஏனைய மூவரும் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முதலாம், இரண்டாம் எதிரிகளுக்கு 42 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 3ஆம் எதிரிக்கு 32 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்யப் போவதாக குற்றவாளிகள் தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

(உ-6)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

சமயம் அங்கு வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

இவர் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகியவர் என்றும்—

இவரது சகோதரர் ஒருவர் ராஸிக் குழு எனப்படும் தேசிய துணைப்படையில் உறுப்பினராக உள்ளதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

[ஐ-21-6]

எமது வீடியோ CD வெளியீடுகள்!

அஜித், கார்த்திக் மீனா. மணிவண்ணன் வடிவேல் நடித்த

ஆனந்த பூங்காற்றே

சரண்ராஜ் - சுருதி நடித்த

அண்ணன் தங்கச்சி

வீடியோ பிரமிட் CD பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர்க் வீடியோ லைபிறறி

51 அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

Phone: 2364

(66254)

விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம்: 3–06–99 (8:30 – 2.00)

❖ விசேட கணித வகுப்புகள்

ஆரம்பம்: 5–06–99 (1:00 – 2,00)

By C. K. B. தயாளன் (66247)

தேவை

Ms Word தெரிந்த கணனியில் தமிழ் தட்டச்சு (Type Setting) செய்வதில் தேர்ச்சியுள்ளவர்கள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொலைத் தொடர்புகளுக்கு 021-2881

தயா அச்சகம்

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(66244)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 01-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org